Registered M. 916

THE VEDANTA DIPIKA

A RELIGIOUS & PHILOSOPHICAL MONTHLY.

Vol. VIII. March 1918. No. 6

Editor.—Dewan Bahadur T. T. Rangachariar, B.A., B.L.

வேதாந்த தீபிகை

ஸம்புடம் 8.] பிங்கள௵ பங்குனி௴ [ஸஞ்சிகை 6

1. பத்ராதிபரின் குறிப்புகள் 225

2. வேதாந்தஸங்க்ரகம்

ஸ்ரீ. உ.ப. எஸ். கோபலஸ்வாமி அய்யங்கார் 240

3. ஸ்வாகத நிவேதந பத்ரிகை

ஸ்ரீ. உ.ப. எஸ். வேதாந்தாசார்யர் 249

4. ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள பகவத் ஸ்தோத்ரங்கள்.

ஸ்ரீ. உ.ப. டி. ராஜகோபாலாசார்யர் 253

5. கடிதங்கள் 266

Published by the Secretary Sri V. S. Sabha.

K. R. Press, Madras.

Copy-right reserved.

Annual Subscription Rs. 3-0-0] [Single Copy As 4.

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

இப்பத்ரிகையின் முக்கிய நோக்கங்கள்.

(1) உபநிஷத்துக்களிலும், ப்ரஹ்மஸூத்ரம் பகவத்கீதை முதலான க்ரந்தங்களிலும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகளிலும் இருக்கும் விசிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்கள் வெளியாக்கப்படும்.

(2) அத்வைதம், த்வைதம் முதலான மதங்களின் ஸ்வபாவங்களும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக்கொண்டு எடுத்துக் கூறப்படும்.

(3) தைவபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் கதைகளும் வெளிவரும்.

இதைப்பற்றி சில அபிப்ராயங்கள்.

(1) இந்து நேசன் :—————— 12 - மாத பத்திரிகையின் கிரயம் ரூபாய் இரண்டாயிருப்பினும், அமைக்கப்பெற்ற விஷயங்களின் சீரும், பாஷையின் நடையும் விலையில்லா மாணிக்கங்களென்றே சொல்லலாம்.

(2) மதிராஸ் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதரான மஹாமஹோபாத்தியாயர் வே. ஸ்வாமிநாத ஐயர் : இது தென்னாட்டுப்பத்திரிகைகளுக்குள் முதன்மையான தென்று சொல்லலாம்.

(3) மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர் :—

……………இதில் விசிஷ்டாத்வைத மத ஸம்பந்தமான உபந்யாஸங்களும் வேதாந்தார்த்த விசேஷ விசாரங்களும் புராணகதைகளும் ஆசார்ய சரித்ரங்கள் முதலியவை வெளியிடப்படுகின்றன. இதற்கு விஷயப்ரதாநம் செய்பவர்கள் உபயவேதாந்த பாரங்கதர்களாகவும் சாஸ்த்ர ஸம்பந்நர்களாகவும் காணப்படுதலால், பாரலௌகிக புருஷார்த்தங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு இதில் நன்கு விவரிக்கப்படு மென்று தோன்றுகின்றது.

NOTICE.

Subscribers are requested to quote the wrapper number in all their communications to the manager. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர் வேதாந்த தீபிகை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா" என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும் கட்டணம் கட்டுவதும் விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும் மற்றெல்லா விஷயங்களும் விலாஸத்தில் குறித்திருக்கும் நம்பரைக் கண்டு, "மானேஜர், வேதாந்த தீபிகை, 11, கேஸவப்பெருமாள் ஸந்நிதி வீதி, மயிலாப்பூர், மதிராஸ்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 3.

“ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷா கட்டம் பகவத் த்யாநத்தின் கர்த்தவ்யதையை ஸாதிக்கிற ப்ரகரணமாகையால், ததநுகுணமாக, ‘ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:’ என்கிற ஶ்ருதியை எடுத்தது இதரர்களுக்குப் பாதகமாகமாட்டாது” என்று எழுதும் லேககர் “ஸ்வஸ்வஸூத்ரஶாகீய க்ருஹ்யோக்த ஸம்ஸ்கார ஸம்ஸ்க்ருதஸ்ய வேதாத்யயநம் நிஷ்ப்ரத்யவாயமவதி; ஏதத்ஸம்ஸ்கார ஹீநஸ்ய ப்ரத்யவாயோ பவதி. ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய இதி ஶ்ருதிரபி ஸம்ஸ்காரவதாமேவ அத்யயநம் ப்ரவர்த்ததே” என்னும் ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா வாக்யத்தை ஆலோசித்தாவது பராமர்ஶித்தல் நன்று.

‘பாஷ்யேஷு ந்யாஸா ஸ்தத்பாஷ்யேஷு ந்யாயவிசார்யதா:’

என்கிற ந்யாயத்தை அநுஸரித்து விஷய விமர்ஶம் செய்யும்போது ப்ரமாணுநுக்ரஹீத ப்ரபந்தாந்தரத்தை ஸம்வாதத்திற்கு எடுத்தால், ஒருவர் தமக்குள்ள விப்ரதிபத்தியால் அதைக் கைக்கொள்ள மறுத்தாராகில், இந்த விப்ரதிபத்தி ஸர்வத்ர ப்ரஸங்கித்து ஸஹ்ருதய வ்யாகுலீபாவஹேதுவாகு மாகையால், இது விப்ரதிபத்தி தானேவென்று ஶங்கிக்க இடம் ஏற்படுகிறது.

“அநுஸந்தாநம் வேறு, ப்ரகாஶநம் வேறு; அநுஸந்தாநம் ஶிஷ்யக்ருத்யம், ப்ரகாஶநம் ஆசார்ய க்ருத்யம்;” என்று அடியேன் பங்கிட்டுக் கொடுத்திருப்பதாயும் அதற்கு மூலம் ஸ்ரீஸாராஸ்வாதிநீ பங்க்தியின் அர்த்தத்தையே வேறாக எண்ணியதுதான் என்றும் லேககர் எழுதுகிறார். அடியேன் உபயபாகம் செய்தது வாஸ்தவமே. லேககரும் யதாதிகாரம் உபயபாகத்தை எடுத்துக்கொள்ளலாம்.

தத்தத் தர்மக்ராஹக ப்ரமாணாதிகளாலே அநுஸந்தாநத்திற்கும் ப்ரகாஶநத்திற்கும் ஸ்வரூபத: விஷயத: காலதஶ்ச பரஸ்பரபேதம் ஸுஸ்பஷ்டம். ப்ரகாஶநம் அநுஸந்தாந ஸஹக்ருதமானாலும் பக்திப்ரபத்தி ந்யாயேந அநுஸந்தாந ப்ரகாஶந விபாகம் செய்யத்தட்டில்லை. ஒன்று மற்றொன்றுக்கும் உபலக்ஷண மென்று சொல்லவேண்டியதற்கு யாதொரு நிபந்தநமோ நிர்ப்பந்தநமோ காணவில்லை.

இப்பொழுது கிடைக்கிற ஸ்ரீகோஶங்களை அநேகாவ்ருத்தி ஸேவித்ததிலும் ப்ரகாஶநத்தையும் அநுஸந்தாநத்தையும் பர்யாயம்போல் சொல்லுகிற ஸ்ரீஸூக்திகள் மூலத்திலும் வ்யாக்யாநங்களிலும் அடியேனுக்கு விஶதமாகவில்லை. ‘யதாஹ்யயம் ஸ்வஶிஷ்யேஷு ஹ்ருத்’ என்கிற வசநத்திலும் ‘ஓதந்தீதி வ்ருத்தி’யை விமர்ஶித்தால் அநுஸந்தாநமும் ப்ரகாஶநமும் பிந்நகாலிக மென்பது ஸ்பஷ்டமாகும். அப்படி அநுஸந்தாநம் பண்ணும்போது அந்த ஆசார்ய வ்யக்தி ஸ்வாசார்ய ஶிஷ்யதவேநைவ அநுஸந்தாநம் பண்ணு

இற விஷயம் நடாரஸாஹ்லாதி ந்யாயம் அறிந்தார்க்கு ஸுவிஶதம். பித்ருத்வ புத்ரத்வாதிகள் போலே ஸம்பந்தி பேதாதிநா ஏக வ்யக்திக்கே உபயமும் அவிருத்தம். ப்ரகாஶநாநுஸந்தாநங்களுக்கு ஐக்ய ப்ரமாதிநா மந்தமதிகளுக்கு உண்டாகும் விரோத ஶங்கா நிவ்ருத்யர்த்தமாகவே விஷய பேதேந பரிஹாரம் ஸ்ரீ ஸாராஸ்வாதிநீயில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. விஷயபேதமோ காலபேத நியதம். இந்த ஸ்ரீ ஸாராஸ்வாதிநீ பங்க்தியில் 'தான்' என்பது ஶிஷ்யனைக் குறிப்பதாக அடியேன் நினைத்திருப்பது போல் நிபுண நிருபகர் ஊஹித்தபடி அடியேன் நினைக்கவில்லை. 'தான்' என்பது ஆசார்ய வ்யக்தியைத்தான் குறிப்பிடுகிறது.

இந்த விஷயங்களை யெல்லாம் ஆலோசனை செய்துதான் 'அநுஸந்தாநம் ஶிஷ்யக்ருத்யம், ப்ரகாஶநம் ஆசார்யக்ருத்யம்' என்று அடியேன் எழுதினது. ஆகையால்தான் அன்றோ ஆசார்யர்கள், ஶிஷ்யன் தம் தனியனைச் சொன்ன பிறகு, தமது ஆசார்யகளுடைய தனியன் முதற்கொண்டு தாமும் சேர்ந்து சொல்லக் காண்கிறோம். அந்யதா தம் தம் தனியன்களையும் தாமும் சொல்ல ப்ரஸங்கியாதோ?

ஸ்ரீ ஸாராஸ்வாதிநீ பங்க்திக்கு, 'தான்', 'ஸ்வபரிவேவ' என்னும் பத ஸ்வாரஸ்யாதிகளைச் சொல்லி வ்யாக்யாநாந்தரம் பண்ணுவது பூர்வ ஸாராஸ்வாதிநீ விருத்தமாகையால் அஸ்தாநே பரிஶ்ரமமாய்த் தீருகிறது.

ஆகையால் நிபுண நிருபக ஸ்வாமி இவைகளை நிபுணதமம் நிருபணம் பண்ணியருள வேண்டுமென்றும் ஸர்வத்ர ஸ்ரீ ஸாராஸ்வாதிநீ பங்க்தியர்த்தம் யதாவத்தாய் அடியேனுக்கு ஸ்புரிக்கும்படி அநுக்ரஹிக்க வேணுமென்றும் ப்ரார்த்திக்கிறேன்.

23—12—17. உ. ச. ராயம்பேட்டை. க்ருஷ்ணமாசார்யன்.

(2)

ஸ்ரீ ராமாயண படநக்ரமமும் அதன் பலமும்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

[illegible] ।

[illegible] ॥

ஸ்ரீ பகவானுடைய கல்யாணகுணங்களை அநுபவிக்கும் கேவல முமுக்ஷுக்கள் விஷயத்தில், அவனுடைய திவ்ய குண விசேஷ்டிதங்களை வெளியிடுகின்ற ஸாத்விக இதிஹாஸ புராண படநாதிகளைச் சில நியத க்ரமங்களுடன் செய்யவேணுமென்று யாதொரு நிர்பந்தமுமில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். புபுக்ஷுக்கள் விஷயத்திலோ, சில க்ரமங்கள்

பெரியோர்களால் விதிக்கப்பட்டு அநுஷ்டிக்கப்பட்டும் வருகின்றன. அபவர்க்கப்ரதனான பகவான், தன்னை த்யாகிக்குமவர்களுக்கு ஆநுஷங்கிக போகங்களையும் கொடுக்கிறான் என்பது ஶாஸ்த்ர ஸித்தம். ரோகாதிகளால் வருந்துமொருவன், ஸ்ரீமத்ராமாயணத்தை சில முறைகளுடனும் த்ருடமான விஶ்வாஸத்துடனும் பாராயணம் செய்து வந்தால், ரோகத்திலிருந்து நிவ்ருத்தனாய் ஸுகத்தை அடைகிறான் என்பது அடியேனுக்கு அநுபவத்தில் வந்திருக்கிறது. பரமசிகித்ஸகனான ஸ்ரீ பகவானிடத்தில் விஶ்வாஸமில்லாமல் அநபிஜ்ஞர்களான ஸாமாந்ய சிகித்ஸகர்களிடத்தில் ப்ரதிபத்தியைச் செய்து உத்திஷ்ட பலமின்றிக்கே மஹத்தான தேஹ ஶ்ரமத்தையும் அர்த்த வ்யயத்தையும் அடையும் தீந ஜநங்களைப் பார்க்குங்கால், அத்யந்தம் ஸுலபமாயும் நிஶ்சயமாக ஆநுகூல்யத்தைச் செய்யக்கூடியதுமான ஸ்ரீமத் ராமாயண பாராயண ரூபமாகிற ஔஷதத்தை ஏன் அவர்கள் ஸேவிக்கக்கூடாது? என்னும் வருத்தம் அடியேனுக்கு ஜநிக்கின்றது. "[illegible]" என்னும் ந்யாயத்தை அநுஸரித்து, தீபிகாபிமாநிகளுக்கு உபகரிக்கவேணுமென்னும் எண்ணத்துடன் அடியேன் இந்த விஜ்ஞாபநத்தைச் செய்யத் துணிகின்றேன்.

"[illegible] ।
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

ஸ்ரீமத் ராமாயணத்தைப் படிக்கும் ப்ரகாரங்களில் பல முறைகள் உண்டு. ஆகிலும், கீழ்க் குறிக்கப்படும் முறையே மிகச் சிறந்ததென்று அதைக் குறிக்கும் ஶ்லோகங்களால் அறியலாம். அவையாவன :—

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।

இந்த ஶ்லோகங்களில் கடபயாதி ஸங்க்யைகளால் பாராயண க்ரமம் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த ஸங்க்யா ரீதியை அநுஸரித்துப் பார்த்தால், க்ரமம் இவ்வாறு என்று தெரியவரும் :—

பாலகாண்டம் -	முதல்	திநம்	22	ஸர்க்கங்கள்
	2-வது	,,	28	,,
	3-வது	,,	27	,,
அயோத்யா ,,	4-வது	,,	15	,,
	5-வது	,,	19	,,
	6-வது	,,	19	,,
	7-வது	,,	21	,,
	8-வது	,,	23	,,
	9-வது	,,	22	,,
ஆரண்ய ,,	10-வது	,,	24	,,
	11-வது	,,	25	,,
	12-வது	,,	26	,,
கிஷ்கிந்தா ,,	13-வது	,,	19	,,
	14-வது	,,	20	,,
	15-வது	,,	28	,,
ஸுந்தர ,,	16-வது	,,	13	,,
	17-வது	,,	21	,,
	18-வது	,,	18	,,
	19-வது	,,	16	,,
யுத்த ,,	20-வது	,,	21	,,
	21-வது	,,	18	,,
	22-வது	,,	17	,,
	23-வது	,,	11	,,
	24-வது	,,	12	,,
	25-வது	,,	17	,,
	26-வது	,,	18	,,
	27-வது	,,	17	,,

இம்மாதிரி 27 திநங்களில் ஆறு காண்டங்களையும் பாராயணம் செய்தால் ஸ்ரீ பகவான் அநுக்ரஹிப்பன் என்பது நிஶ்சயம். ஆயில்ய நக்ஷத்ரத்தில் ஆரம்பித்துப் புஷ்யத்தில் பட்டாபிஷேகம் செய்வது உத்தமம்.

அஶக்தர்களோ, ஸுந்தரகாண்டத்தை மட்டிலாவது,

“ [illegible] ”

என்னும் ரீதியை அநுஸரித்து 16 திநங்களில் பாராயணம் செய்யலாம். ஒவ்வொரு திநத்திலும், 2, 4, 4, 4, 8, 1, 8, 1, 5, 5, 7, 6, 1, 4, 2, 4, ஸங்க்யையுள்ள ஸர்க்கங்களை யதாக்ரமமாகப் படித்து 16 திநங்களில் முடிக்கலாம். “ முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் ” அன்றோ?

யஸ்து ராமம் ந பஶ்யேத்து யம் ச ராமோ ந பஶ்யதி ।
நிந்தித: ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே ॥

பட்டுக்கோட்டை, 30-10-17.

ஸ்ரீஶைல தாதாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

[பின்வரும் ப்ரகடன பத்ரிகை, சென்ற மார்கழி மாஸத்தில் திருக்கண்டியூரில் நடைபெற்ற மஹா ஸங்கத்தில் இரண்டாவது நித்திய ஸதஸ்ஸில் படிக்கப்பட்டது.]

தமிழ் ப்ரஸங்க பரீக்ஷை.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

புருடரிற் பரமன் பூங்கழல் வாழ்த்தித்
திருமகள் கொழுநன் திருவரு மறவா
மாறன் தமிழ்மண மலரடி போற்றிக்
கூறுவன் சில மொழி குணமுண சபையீர்!
அருள் தரவேண்டினன் அடியன் காண்மின்.

இனி, வருடந்தோறும் ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம் நடக்குமிடத்தில் தமிழ் ப்ரஸங்க பரீக்ஷை நடத்தப்படும். அதற்குப் பஹுமானம் ரூ. 10. பரீக்ஷைக்கு வருபவர்கள் தென்கலை வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்களா யிருத்தல் வேண்டும். செந்தமிழில் தெளிவும் தண்மையும் நல் நடையுமுள்ளதாய், வடமொழிப் பதங்களையும் பரிபாஷைகளையும் விசேஷமாய் உபயோகிக்காமலிருக்கவேண்டும். பாஷா வல்லபமும் போதகா சக்தியுமே முக்யம். இக்கால நிலைக்குத் தக்கபடி ப்ரஸங்கம் செய்யும் சதுரர்கள் ஏற்பட்டு க்ராமாந்தரங்களில் ப்ரஸங்கங்கள் நடக்குமானால், ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் எங்கும் பரவி நல்ல ஸத்கதி உண்டாகுமென்பதற்காகவே இந்த பரீக்ஷை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றை விவரங்கள் வேதாந்ததீபிகை வாயிலாக வெளிப்படும்.

இல்லையம்பூர்:

திருக்கண்டியூர்,
26—12—17.

ஸோமயாஜி. வேங்கடராம ஐயங்கார்,
(தமிழ்ப்பண்டிதர்)

ஸ்ரீ꞉.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

சந்தா வரவு.

(1918 - ஜனவரி மாஸம்)

1.	ஸ்ரீ. உப.	ஸ்ரீநிவாஸராகவாசாரியர், கோயம்புத்தூர்	5 0 0
2.	,,	கெ. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், தஞ்சாவூர்	3 0 0
3.	,,	எஸ். ஸௌந்தரராஜ ஐயங்கார், திருச்சிநப்பள்ளி	3 0 0
4.	,,	எம். ஆர். ராஜகோபால அய்யங்கார், தஞ்சாவூர்	3 0 0
5.	,,	எஸ். வரதாசாரியர், மயிலாப்பூர்	5 0 0
6.	,,	எஸ். எம். நரஸிம்மாசாரியர், சங்கரன்பாடி	3 0 0
7.	,,	பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், எழும்பூர்	5 0 0
8.	,,	திவான்பஹதூர். டி. டி. ரங்காசாரியர், திருவள்ளூர்	5 0 0
9.	,,	டி. ராஜகோபாலாசாரியர், மயிலாப்பூர்	5 0 0
10.	,,	சி. ஆர். கோபாலகிருஷ்ணய்யங்கார், பொல்லாச்சி	3 0 0
11.	,,	எம். ரங்காசாரியார், மைசூர்	3 0 0
12.	,,	வி. ஸ்ரீநிவாஸாசாரியர், இராயபுரம்	3 0 0

வித்வத் ஸதஸ் சந்தா வரவு.

1.	ஸ்ரீ. உப.	டி. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், கோயம்புத்தூர்	15 0 0
2.	,,	என். ஸம்பத்அய்யங்கார், அஹமட்நகர்	3 0 0
2.	,,	பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எழும்பூர்	2 0 0
4.	,,	திவான்பஹதூர். டி. டி. ரங்காசாரியர், திருவள்ளூர்	10 0 0
5.	,,	வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மதராஸ்	25 0 0
6.	,,	வித்யாபூஷணம். ஆ. கோவிந்தாசாரியர், மைசூர்	5 0 0

[நமது ஸபையின் மற்றை அங்கத்தினர்களும் விளம்பமின்றிக்கே தமது சந்தாதொகையைச் செலுத்த வேண்டுமென்று மிக்க வணக்கத்துடன் ப்ரார்த்திக்கிறோம்.

தமிழ் மாஸக் கணக்குப்படி ஒவ்வொரு மாஸத்திலும் 10-வது தேதிக்குள்ளாக (அதாவது : இங்க்லிஷ் மாஸம் சற்றேறக்குறைய 20-வது தேதிக்கு மேற்படாமல்) நமது பத்ரிகையை வெளியிட்டு வருகிறோம் என்பது நமது அபிமாநிகளெல்லாருக்கும் தெரிந்த விஷயம். நமது அநவதாநத்தினுலோ அல்லது தபால் ஆபீஸ் தவறுதலினுலோ மேற்குறித்துள்ள தேதிக்குள்ளாக ஸபையின் அங்கத்தினருக்குத் தீபிகை கிடைக்காவிட்டால், அவர்கள் க்ருபையுடன் தமக்குப் பத்ரிகை கிடைக்கவில்லையென்பதை இந்த ஆபீஸுக்கு உடனே தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ. வாஸுதேவதாஸ꞉.]

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 8.] பிங்களஹ பங்குனிமீ [ஸஞ்சிகை 6.

த்ரிபு⁴வநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌ³ரவராம்ப³ரம் த³தா⁴நே । வபுரலககுலாவ்ருதாநநாப்³ஜம் விஜயஸகே² ரதிரஸ்து மேऽநவத்³யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

மதங்கள் உண்டாகும் ப்ரகாரம்.

மநுஷ்யர்க்குள் மதமென்பது உண்டாகக் காரணம், அவ்வவர்களுடைய இஷ்டப்ராப்தி விஷயமாயும், அநிஷ்டநிவ்ருத்தி விஷயமாயும், ஸ்வப்ரயத்நங்களால் ஸாதித்துக்கொள்ளக் கூடாதவைகளை தேவதா ப்ரஸாதத்தால் ஸாதித்துக்கொள்ள வேண்டுமெனும் இச்சையென்று சொன்னேம். ருக்வேதம் 10-வது மண்டலம் 72-ஸூக்தத்தில், 'தே³வாநாம் பூர்வ்யே யுகே, தே³வாநாம் ப்ரத²மே யுகே' எனும் சப்தங்களால், ஆதித்ய தேவதைகள் கல்பாந்தரங்களில் ஆராதிக்கப்பட்டாரென்று தெரிகின்றது. சிலர் ஈச்வரனைத் தவிர்த்துத் தேவதாந்தரங்களை ஒப்புக்கொள்வதில்லை. சிலர் ஈச்வராஜ்ஞா பரிபாலகர்களான அதிகாரிதேவதைகளை ஒப்புக்கொள்கின்றார்கள். பல ஜாதியார் ஈச்வர ஸ்வரூப குணங்களையும், ஐச்வர்ய மெனப்பட்ட தன்மையையும் அறியாமலே, தத்தம் ஜாதிக்குரியதாக வெண்ணப்பட்ட தேவதை

யொன்றையோ அநேகங்களையோ நம்பிக்கொண்டு, அவற்றையே அந்யஜாதியர்க்கு விரோதிகளாகவும் எண்ணினார்க ளென்பது, பைபில் முதலான புஸ்தகங்களைக் கொண்டு ஊகிக்கத்தக்கது. இந்த விஷயத்தில்,

“𑌕𑌾𑌮𑍈𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌤𑌂 𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌯𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌾 ॥

𑌯𑍋 𑌯𑍋 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌶𑍍𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌤𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

𑌸 𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍀𑌹𑌤𑍇 ।
𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍𑌹𑌿 𑌤𑌾𑌨𑍍 ॥

𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌾𑌂 ।”

என்கிற கீதாவாக்யங்கள் ஸத்யத்தைச் சொல்கின்றன. பரலோக ஸம்பந்தமாக நாஸ்திகர்க்கு எதுவும் விச்வாஸார்ஹமன்று. பல மதங்களைப் பார்த்து அதிலொன்றும் இதிலொன்றுமாகச் சில அம்சங்களைச் சேர்த்தும், அவற்றுள் ஏகரூபமாகப் பாவிக்கும் அம்சங்களை மாத்ரம் ஒப்புக்கொண்டும், மநுஷ்யக்ருதங்களாக லோகத்தில் உண்டான ப்ரஹ்மஸமாஜம் தியாஸபி முதலான கட்டுப்பாடுகள் விமர்சசீலர்களால் அநாதரிக்கத்தக்கன. தத்வத்தை ஈச்வரனே மேலே விவரித்தபடியே வெளிப்படுத்தினார். ஜந்மாந்தரவாஸநாநுஸாரியாக ஏற்பட்ட ஸ்வபாவத்தினால் ஒவ்வொருவனும் தூண்டப்பட்டு, இஷ்டப்ராப்தி அநிஷ்டநிவ்ருத்தி ரூபமான அபேக்ஷிதங்களையிட்டு ஈச்வரனைக்காட்டிலும் வேறுபட்டவராக நின்று, ஈச்வரனுக்குச் சரீரபூதர்களான தேவதைகளை ஆச்ரயிக்கின்றான். அந்தத் தேவதைகளுடைய பூஜையில் அவ்வவனுடைய ப்ரார்த்தைக்குத் தகுந்தாப்போலே, பகவானே தத்தத் தேவதாந்தர்யாமியாக இருந்து, அவன் இச்சித்த பலங்களைக் கொடுக்கின்றான். அஜ்ஞாநப்ரவ்ருத்தர்களான அவர்களுடையும் பலம் அநந்தமானதன்று; அந்தவத்தானதே. இந்த உண்மையானது லோகத்தில், பல தேசங்களில், பல காலங்களில், பல ஜாதி ஜநங்களால் விச்வஸிக்கப்பட்ட பல மதங்களுக்கும் பொருந்தும். ஈச்வரன் ஒருவன் உண்டென்றும், அவனுடைய ஆஜ்ஞாநுவர்த்திகளாய், அதிகாரிதேவதைகளாய், லோகோபகாரிகளாய், இருக்

கின்ற ஜீவாத்மாக்களும் உண்டென்றும் நம்புகிறவர்களுக்குக் கீதாவாக்யம், ஸர்வஸமயங்களுடையவும் தத்வத்தை விளக்குவதாகத் தெரியும்.

தேவதாந்தரங்களை விட்டு ஸர்வேச்வரனையே க்ஷுத்ர ப்ரயோஜந நிமித்தமாக ப்ரார்த்திப்பார்கள் உண்டு. இவர்கள் முன் சொன்னவர்களைக் காட்டிலும் மேற்பட்ட அதிகாரிகள். இவர்களை ஆர்த்தரென்றும் அர்த்தார்த்திகளென்றும் பகவான் விவரித்தார்; அநிஷ்டநிவ்ருத்தியையும், இஷ்டப்ராப்திகளையும் அபேக்ஷித்தவர்களாதலால் இவர்கள் உத்க்ருஷ்டாதிகாரிகளல்லர்.

மதாந்தரங்கள் இதற்கு மேற்பட்ட அதிகாரிகளைப்பற்றிச் சொல்லவில்லை. கிறிஸ்தவமதமும் மஹம்மதியமதமும் ஈச்வரனை வழிபடும் மதங்கள்; ஆனாலும் ஈச்வர ஸ்வரூபகுணவிபூதிகளையும் ஜீவாத்ம ஸ்வரூபத்தையும் அறிந்து வழிபடுகின்றனவோ என்பதைப்பற்றி நமக்கு நிச்சயமில்லை. கேவல கர்மத்தினால் அக்ருதமான முக்தி கிடைப்பதென்பதை வேதாந்தம் நிஷேதிக்கின்றது. ஜ்ஞாநத்தால் மோக்ஷமென்று வேதாந்தம் சொல்லும். அந்த ஜ்ஞாநம் பக்திரூபத்தை அடைந்தால்தான் பகவத் ப்ராப்தி ஸித்திக்குமென்பார் நம் ஸம்ப்ரதாயாசார்யர்கள்.

ஆதலால் உத்க்ருஷ்டாதிகாரிகள் ஜிஜ்ஞாஸுவென்றும் ஜ்ஞாநியென்றும் பகவானால் விவரிக்கப்பட்டார்கள்; ஜ்ஞாநி என்றால் 'விஷ்ணோ: தத்வவித்' என்றார் ஸ்ரீ சங்கராசார்யர். ஜிஜ்ஞாஸுவாயிருந்தவன்தான் ஜ்ஞாநியாக அமையும். ஜ்ஞாநியானவன் 'நித்யயுக்த:, ஏகபக்தி:' என்றும் சொல்லப்பட்டான்; அதாவது பகவானைத் தவிர்த்து வேறொன்றில் அவனுக்குப் பற்றில்லை; ஆதலால் பகவான் எப்போதும் அவன் மநஸ்ஸைவிட்டு விலகமாட்டார். பகவான் ஜ்ஞாநிக்கு அத்யர்த்தம் ப்ரியன்; ஜ்ஞாநியும் பகவானுக்கு ப்ரியன். பகவான் அவனைத் தானாகவே எண்ணுகின்றார்; ஏனெனில் பகவானையே அவன் ப்ராப்யமாக எண்ணி, தத்ஸ்மரணத்தாலேயே ஸர்வகாலத்தையும் போக்குகின்றான். அவனுக்கு ஸர்வமும் வாஸுதேவனாகப் பாஸிக்கும். இவ்வண்ணம் பகவத் வாக்யங்கள் கீதையில் தொடர்கின்றன.

நம்முடைய ஸம்ப்ரதாயம்.

ஸர்வ வேதார்த்தங்களையும் ப்ருஹ்மஸூத்ரங்களால் நிர்ணயித்த பாதராயணர், முமுக்ஷுக்களால் அறிய வேண்டிய ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஆநுஷங்கிகமாக ஜீவஸ்வரூபத்துடன் ப்ரதம த்விதீயாத்யாயங்களாலும், புருஷார்த்தமான ப்ராப்ய ஸ்வரூபத்தைக் கதிசிந்தனையுடன் சதுர்த்தாத்யாயத்தாலும், ப்ராப்தி ஸாதகமான உபாயஸ்வரூபத்தைத் தத்ப்ரதிபந்தகமான ஸம்ஸார விவரணத்துடன் த்ருதீயாத்யாயத்தாலும், ச்ருதியையும் ஸம்ருதியையும் அநுஸரித்து நிஷ்கர்ஷித்திருக்கின்றார். இந்த ப்ரக்ரியைகளை யோசித்தே நம்முடைய பூர்வாசார்யர்கள் முமுக்ஷுக்கள் அறிய வேண்டியவை தத்வம், ஹிதம், புருஷார்த்தம், இவற்றைத் தெரிவிக்கும் ஜ்ஞாநமென்று உபதேசித்தார்கள். இவர்கள் ப்ரமாண சரணர்கள். ஆதலால், இவர்கள் உபதேசித்த ஜ்ஞாநமெல்லாம், வேதவேதாந்தங்களை அநுஸரித்தும், அவற்றிற்கு விரோதமின்றி அவற்றின் உபப்ரஹ்மணங்களாய் ருஷிகளால் பண்ணப்பட்ட இதிஹாஸபுராண வசநங்களை அநுஸரித்தும் நமக்குக் கிடைத்திருக்கின்றது. இப்படி ஏற்பட்ட ஸம்ப்ரதாயத்துக்கு த்வேஷிகள் என்றும் உண்டு. அவர்களைப்பற்றி பொதுவாகத் ஸ்ரீபகவான் துஷ்க்ருதிகள் என்றும், தனித்தனியே மூடர்கள் என்றும், நராதமர்கள் என்றும், மாயையால் அபஹரிக்கப்பட்ட ஜ்ஞாநமுடையவர்களென்றும், அஸுர பாவத்தை ஆச்ரயித்தவரென்றும் சொன்னார். ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளத்தில் விபரீத ஜ்ஞாநமுடையோர் மூடராவார்; அதாவது ஆத்மாவை ஸ்வதந்த்ரனென்றும், லோகத்தைப் போக்யமென்றும் நினைப்போர்; நராதமர்கள் ஸாமாந்யமாகப் பகவத் ஸ்வரூபத்தை யறிந்திருந்தும், பகவதபிமுக ராகாதவர்கள்; மாயாபஹ்ருத ஜ்ஞாநவந்தர் பகவத் ஸ்வரூபகுண ஐச்வர்யாதி ஜ்ஞாநமுண்டாயிருந்தும் யுக்தி வாதங்கள் செய்து அதை இழந்தவர்; அஸுரஸ்வபாவமுள்ளவர்களுக்கோ மேற்சொன்ன ஜ்ஞாநம் உண்டாயிருந்தும், அது பகவத் த்வேஷத்தின் பொருட்டேயாகும்.

அதனிடம் த்வேஷம்.

இவ்வண்ணம் அநாதியாக, அவிச்சிந்ந ஸம்ப்ரதாய க்ரமத்தில், வேதமார்க்கத்தை லோகத்தில் தழைக்கச் செய்ய வந்தது பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம். இதில் ஜநித்து ஸம்ப்ரதாய பரிசயத்திலும் கிஞ்சித் ச்ரமப்பட்டவர்கள், ஸம்ப்ரதாய தூஷகர்

களாகக் கூடுமென்று இவ்வளவு தூரம் எழுதினோம். பண்டிதர்க்குள், கடப்பை பாஷ்யகாரர் எனும் ஸ்வாமி காலக்ஷேபாதிகள் செய்துவிட்டுத் தியாஸபியில் சிக்கிக்கொண்டு, ஸ்வநிஷ்டையை இழந்துபோனாரென்று நம் ஸம்ப்ரதாயஸ்தர்கள் சோகித்தார்கள். அதன்பிறகு நம்முடைய ஸம்ப்ரதாயாபிமாநியாயிருந்த ஸ்ரீமான். வி. கே. ராமாநுஜாசார்யர் இப்போது தியாஸபி ஸங்கத்தைச் சேர்ந்திருக்கின்றார். அநந்தபுரத்தில் அவர்செய்த உபந்யாஸமொன்றில் ஈச்வரன் அநந்தனெனும், உண்மையைத் தியாஸபி ஸ்தாபிக்க வந்ததென்றும், ஈச்வரன் காலதேச வஸ்துக்களால் பரிச்சேத மற்றவரென்றும் யாதொரு ஸங்கமு மற்றவரென்றும் சொன்னாராம். ஈச்வர சப்தஸ்தாநத்தில் அவர் ப்ரயோகித்த பதம் (God) இந்த இங்கிலீஷ் வார்த்தை ஒரு புருஷனிடம் அந்வயிக்குமேயன்றி, ஜ்ஞாத்ருத்வம் நீங்கிய கேவல ஜ்ஞாந ஸ்வரூபத்துக்கு அமையமாட்டாது.

அத்வைதிகள் போலே நாம் பரப்ரஹ்மத்தை நிர்க்குணமென்றும் ஸகுணமென்றும் விபாகித்து யோசிக்கின்

அத்வைத மதம். றோமில்லை. அத்வைதிகள் தங்களுக்கு முக்யப்ரமாணமாக எடுத்துக்கொண்ட மாண்டுக்யோபநிஷத்தில், ஆத்மாவின் துரீய ஸ்வரூபத்தைப்பற்றி, “ நாந்த꞉ப்ரஜ்ஞம், ந பஹிஷ்ப்ரஜ்ஞம், நோபயத꞉ப்ரஜ்ஞம், ந ப்ரஜ்ஞாநகநம், ந ப்ரஜ்ஞம் நாப்ரஜ்ஞம், அத்ருஷ்டம், அவ்யவஹார்யம், அக்ராஹ்யம், அலக்ஷணம், அசிந்த்யம், அவ்யபதேச்யம், ஏகாத்மப்ரத்யயஸாரம், ப்ரபஞ்சோபசமம், சாந்தம், சிவம், அத்வைதம், சதுர்த்தம் மந்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய꞉’, என்று சொல்லப்படுகின்றது. இது ‘ஸ ஏஷ நேதி நேத்யாத்மா’, என்கிற வசநத்தின் பூர்ண விவரணமென்று சொல்லக்கூடும். ‘ஏகாத்மப்ரத்யயஸாரம்’, என்றால், ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி ஸ்தாநங்களில், ‘ஏகோயமாத்மா’ என்று விடாமல் வரும் ப்ரத்யயம்; துரீயனை அறிவதற்கு இந்த ப்ரத்யயம்தான் ப்ரமாணம் என்று கருத்து. ‘ப்ரபஞ்சோபசமம்’, என்றால் ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி ஸ்தாநங்களுடைய தர்மங்களின் இல்லாமை; ‘சாந்தம்’ என்றால் விகார

ரஹிதம்; ஶிவம் என்றால் பரிசுத்தம்; இவ்வண்ணம் ஶங்கரபாஷ்யப்படி அர்த்தம் சொன்னோம். மேலெடுத்த உபநிஷத் வாக்யத்தில், சதுர்த்தம், ஆத்மா, என்னும் இரண்டு சப்தங்கள் தவிர மற்ற சப்தங்கள் யாவும், ஏதோ ஒரு நிஷேதத்தையே சொல்லி, ஆத்ம ஸ்வரூபத்தை விவரிக்கின்றபடியால், ஆத்மா நமக்குத் தெரிந்த படிகளில் இதுவுமன்று, அதுவுமன்று, இப்படியுமன்று, அப்படியுமன்று, என்று காட்டுகின்றனவே அன்றி, இதம் இத்தம் என்று சொல்லவில்லை. அதை மேல்சொன்னபடி அறிந்துகொள்ளலாமேயன்றி அதை உபாஸிக்க முடியமாட்டாது. 'நாத்மாநம் ந பரஞ்சைவ ந ஸத்யம் நாபி சாந்ருதம் । ப்ராஜ்ஞ: கிஞ்சந ஸம்வேத்தி துர்யம் தத் ஸர்வத்ருக் ஸதா' எனும் ச்லோக ஸம்பந்தமாக, ஶங்கர பாஷ்யத்தில், துரீயத்தைக் காட்டிலும் அந்யவஸ்து இல்லாமையால், அது ஸதா ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கின்றதெனச் சொல்லியிருக்கின்றது. ஆதலால் அதற்கு ஜ்ஞாத்ருத்வ நிஷேதமானது அதைக்காட்டிலும் வேறாக இருப்பதாகக் கொள்ளப்பட்ட வஸ்துக்களைப் பொறுத்தது. மறுபடியும் துரீயவிவரணமாக, 'அமாத்ரஶ்சதுர்த்தோऽவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபஶம: ஶிவோऽத்வைத ஏவமோங்கார ஆத்மைவ', எனும் ச்ருதியின்பேரில், 'துரீய: ஆத்மைவ கேவல: .... வாங்மநஸயோ: க்ஷீணத்வாதவ்யவஹார்ய: .... ஏவம் .... ஓங்கார: ஆத்மைவ' என்று சொல்லி, 'ய ஏவம் வேத' (எவன் இவ்வண்ணம் அறிகின்றானோ) 'ஸம்விஶத்யாத்மநாத்மாநம்', அதாவது: 'ஸ்வேநைவ ஸ்வம், பாரமார்த்திகமாத்மாநம், ப்ரவிஷ்ட இதி, ந புநர்ஜாயதே', என்று ஸித்தாந்தம் செய்யப்படுகின்றது. இது வாக்யார்த்த ஜ்ஞாநத்தால் மோக்ஷம், எனும் அத்வைதிகளுடைய யோசனையை அநுஸரிப்பதாக வெண்ணலாம். இந்த ப்ரகரண விவரணமாக, 'தத்வமஸி, அயமாத்மா ப்ரஹ்ம, தத்ஸத்யம் ஸ ஆத்மா, யத்ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம, ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா, ஆத்மைவேதம் ஸர்வம்', இத்யாதி உபநிஷத் வசநங்கள் ஸ்ரீ ஶங்கர பாஷ்யத்தில் எடுக்கப்பட்டன.

உபநிஷத் முதலான ப்ரமாணங்களைக் கொண்டு, இப்படிப் பட்டதோர் ஆத்மஸ்வரூபத்தை ஸ்ரீ ஶங்கராசார்யர் ஸ்தாபிக்க வந்தார் எனக்கூடும். அவர்க்கு முன்னும், இந்த ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிக் கௌடபாதர் முதலான பூர்வாசார்யர்கள் க்ரந்தங்கள் செய்திருக்கின்றார்கள். வி. கே. ராமாநுஜாசார்யர் ப்ரஸ்தாபித்த God எனும் ஈஶ்வரன் இந்த ஆத்மாதானே! அவராவது, இன்னும் தியாஸபியில் சேர்ந்த எவராவது இந்த ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை '𑌅𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿' என்று பண்ணினார்களோ? அவர்க்கோ மற்றவர்க்கோ ப்ரபஞ்சத்ருஷ்டி நிவ்ருத்தியாயிற்றோ? கார்யகாரண பத்தர்கள் விஶ்வதேஜஸர்களென்றும், ப்ராஜ்ஞன் காரண பத்தனென்றும், துர்யன் கார்யகாரண ஸம்பந்த ரஹிதனென்றும் மாண்டூக்யோபநிஷத்தில் சொன்னபடிக் கார்யகாரண ஸம்பந்த மற்றவரோ ராமாநுஜார்யரும், அவருடைய நூதந ஆசார்யர்களும்? '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿' எனும் வாக்யத்துக்கு அத்வைதிகள் செய்யும் அர்த்தத்தின்படியே அவர்கள் ஜீவன்முக்தர்களோ? அன்றென்று யாவரும் அறிவார். அவர்கள் ஸ்வாராஜ்யாபிமாநிகள்; அதற்காகப் பாடுபடுவர்கள்; அந்யரைக் கண்டிப்பவர்கள்; அந்யர்கள் செய்யும் துன்பத்தை ஸஹிப்பவர்கள்; லோகோபகாரிகள்; தன்னைக்காட்டிலும் வேறு வஸ்துவின் இன்மையால், பரிச்சேதமற்றதும், நிஸ்ஸங்கம் ஶாந்தமென்று சொல்லப்பட்டதுமான ப்ரஹ்மம் தானென்றும், ஜகத் மித்யையென்றும், விஶ்வாஸமாவது அதற்கேற்ற அநுஷ்டாநமாவது அவர்களிடம் இல்லை. அத்தகைய ப்ரஹ்மம் ராமாநுஜார்யருடைய God ஆகமாட்டாது. அதை அத்வைதமதம் ஸ்தாபித்ததாகையால் அதற்காகத் தியாஸபி வரவேண்டியதில்லை.

நம் தர்சநம்.

ஸமஸ்த ஹேயகுணமற்று ஸமஸ்த கல்யாணகுண விஶிஷ்டனாய், ஜகத்காரணனாய், முக்திப்ரதனாய், ஸர்வஜ்ஞனென்றும், ஸர்வவித்தென்றும், ஸமஸ்த ஶக்தியென்றும், ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தமென்றும், ஜ்ஞாந ஸ்வரூபனென்றும், '𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑌿𑌮𑌲𑌂 𑌵𑌿𑌶𑍋𑌕𑌂 .... [illegible]

வொ நயதொ ந்)ஷவி', என்றும் வர்ணிக்கப்பட்ட பகவானை வி. கெ. ராமாநுஜாசார்யர் நினைத்துச் சொன்னரோ? 'யசஹ ஏதயொ நிஂ வரிவஶ்ஂதி யீராஃ', என்று, உபாஸிக்கத்தக்க பரப்ரஹ்மத்தையே, 'யத்தஜெஶ்) உஜாவ ஃ மொத்ரவண ஃ வேக்ஷ ஶ்ரொத்ரஂ தஷவாணிவாஷஂ நித்யஂ விஹுஂ ஸவ ஶ்மதஂ ஸஸ-ஹுக்ஷஂ' என்று முண்டகோபநிஷத் விவரித்தது. அதாவது: எந்தெந்த ஆகாரங்களும் குணங்களும் ப்ரஹ்மத்தினிடம் நிஷேதிக்கப்பட்டனவோ அவற்றின் நிஷேதஸஹிதமாக ப்ரஹ்மம் உபாஸிக்கத்தக்கதென்று ஏற்படுகின்றது. ஆனல் மேலெழுதிய உபநிஷத்வசநம், 'அயவரா (வித்)ா) யயா தஷக்ஷா உயிமமஂதெ', எனும் வாக்யத்தின் பின், அதில் இருக்கும் அக்ஷரசப்த விவரணமாக வருகின்றது. எந்த வித்யையால் அக்ஷரமெனப்பட்ட ப்ரஹ்மம் அறியப்படுகிறதோ அல்லது அடையப்படுகிறதோ, அது பரவித்யை என்று கருத்து. ப்ரஹ்ம லக்ஷணங்கள் யத்தஜெஶ்மென்று ஆரம்பித்துச் சொல்லப்படுகின்றன. ஸ்ரீ ஶங்கராசார்யர் வாக்யார்த்த ஜ்ஞாநம் உண்டான காலத்திலேயே பரவித்யையின் க்ரஹணம் முடிந்து விடுகின்றதென்று சொல்கின்றார். அவர்க்கு இந்த ப்ரகரணம் நிர்க்குண ப்ரஹ்மவிஷயம். ஆனல், 'யசஹ ஏதயொநிஂ வரிவஶ்ஂதி யீரா', என்பதாலும், ப்ரஹ்மத்தை ஜகத்காரணமாகச் சொல்லி, அதை விவேகிகள் பரவித்யையால் அறிகின்றாரென்பதால், அதை ஸகுணமாகத் தான் சொல்லவேண்டும். பிறகு ப்ரஹ்மத்தினிடம் விஶ்வோத்பத்தியை விவரித்து, 'யெநாக்ஷரஂ வுருஷஂ வெஜ ஸத்யஂ ப்ரொவாவ தாஂ தக்வதொ ஹ்ஹ வித்)ாஂ', என்று, ப்ரஹ்மவித்யையால் அறியவேண்டிய அக்ஷர சப்தவாச்யமான ப்ரஹ்மத்தைப் புருஷனென்று உபநிஷத் கூறுகின்றது; பிறகு திவ்)ஃ-அதாவது: ப்ரகாசிக்கின்றவனென்று சொல்லி, அப்புருஷனுக்கு, 'அமிந்ரூயா வக்ஷஷீவஂஉ ஸூ வஃள' என்றாரம்பித்து ரூபமும் சொல்லப்படுகின்றது; அவரை யாவர்க்கும் அந்த்ராத்மா வெனப்படுகிறது; 'உஷ நாயஂ ப்ராணஶரீர

நேசா' வெனப்படுகிறது; 'ருக்மவர்ணம் கர்த்தாரமீசம் புருஷம்', என்று வர்ணித்து, அவனே ஸாதகன் ரூபவிசிஷ்டனாக ஸாக்ஷாத்கரிக்கின்றா னெனவும்படுகின்றது. அந்தப் பகவான் 'திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்ந்யாத்மா ப்ரதிஷ்டித:' என்கிறபடியே பரமபதத்தில் ப்ரதிஷ்டிதனாக விருக்கின்றானென வும் சொல்லப்படுகின்றது. இந்த வாக்யத்தை ஸ்ரீ சங்கராசார்யர் பகவான் ஹ்ருதயபுண்டரீகத்தில் இருப்பதாக வ்யாக்யாநம் செய்கின்றார். இவ்வண்ணம் எந்த உபநிஷத் ப்ரகாணத்தைச் சிந்தித்தாலும், நம்மால் அநுபூதங்களான ஆகாரங்களை ப்ரஹ்மத்தினிடம் நிஷேதித்தும், உபாஸகர் த்யாநிக்க ஸுகரமாயிருக்கும்படி ப்ரஹ்மத்துக்குச் சில ரூபங்களும், ஸ்தாநவிசேஷங்களும், குண விசேஷங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. முமுக்ஷுக்களால் உபாஸ்யபூதனான பகவானை வி. கெ. ராமாநுஜாசார்யர் வேண்டுகின்றாரில்லை.

'க்ஷேத்ரவிம்சத்யம் தவ ரூபமேதி, ந தத்ர வக்ஷ்யே மூர்த்திர வாக் ஸமூர்த்தி ரோகோ ந:, ஸத்யஜ்ஞாநாநந்தம் ப்ரஹ்ம, ஸர்வக்ஷுக்ஷாஸ தவிஜ்ஞம்' என்று பகவானுடைய பரரூபம் வர்ணிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட ஈச்வரனை ராமாநுஜாசார்யர் சிந்தித்தாரகில், அது ஹிந்துமதம் அறியாதவிஷயமன்றே. இதை ஸ்தாபிக்கத் தியாஸபி வருவானேன்? அது எப்படியிருந்தாலும் ஸரி. ப்ரஹ்மத்தினுடைய இத்தகைய ரூபம் மநஸ்ஸுக்கு அகோசர மென்று ச்ருதி முதலான ப்ரமாணங்கள் வெளியிடுகின்றன. அக்நி வாயு இந்த்ரன் முதலான தேவர்கள் அதை அறிந்தாரில்லை யென்று கேநோபநிஷத் சொல்லிற்று. 'யஸ்யாவதாரரூபாணி ஸமர்ச்சந்தி திவௌகஸ: । ந பச்யந்தி பரம் ரூபம்' என்றது ஸ்ரீ விஷ்ணுபுராணம். அதை பூமாவென்று சொல்லிச் சாந்தோக்யோபநிஷத்தானது 'யத்ர நாந்யத்பச்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா' என்று வர்ணித்தது. இந்த ஈச்வர ஸ்வரூபம் தியாஸபி யறிந்ததா? ராமாநுஜாசார்யர் இதை ஸா

க்ஷாத்கரித்தாரோ? 'ஸவம்ஹ்யேவ விஷ்வம் ப்ரஹ்ம தஜ்ஜலாநு' என்கிற உண்மையைக் கண்டுகொண்டு, ராமாநுஜாசார்யரும் அவருடைய தத்கால ஸம்ஸர்க்கிகளும், உபநிஷத் வேண்டினபடி ஶாந்தரானார்களோ? 'ஶாந்த உபாஸீத' என்று உபநிஷத் உபாஸிக்கச் சொல்லிற்றே. Unconditioned and absolute ப்ரஹ்மம் எங்காவது உபாஸநா விஷயமாமோ? மேலும் 'ஆத்மாநம் சேத் விஜாநீயாத் அயமஸ்மீதி பூருஷ꞉ । கிமிச்சந் கஸ்ய காமாய ஶரீரமநுஸஞ்ஜ்வரேத்' என்கிறபடி ஸ்வாத்ம தத்வத்தைக் கண்டறிந்து, இச்சா காமாதிகளை முற்றிலும் நீக்கிச் சரீர ப்ரமங்களை ராமாநுஜாசார்யர் நிவர்த்தித்தாரோ?

'நைவ வாசா ந மநஸா ப்ராப்தும் ஶக்யோ ந சக்ஷுஷா । அஸ்தீதி ப்ருவதோऽந்யத்ர கதம் தது உபலப்யதே' என்கிறபடி, ப்ரஹ்மம் மநஸ்ஸுக்கும் மற்ற இந்த்ரியங்கட்கும் எட்டாததென்றும் ரூபாதிகள் அற்றதென்றும், அநந்தமென்றும், ஸூக்ஷ்மமென்றும் அறிந்துகொண்டு, அவன் பக்தர்களுக்கு இரங்கி ரூபவானாக ப்ரகாசிக்கின்றான் எனப்ரமாணம் காட்டுகின்றது. ஆகையால், ஶ்ருதிஸ்ம்ருதிகள் விதிக்கின்றபடியே ரூபகுண விசிஷ்டனாகப் பகவான் உபாஸிக்கப்படுகின்றான். இன்னும் 'தமேவ தீரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத' என்றும், 'நாநுத்யாயாத் பஹூந் ஶப்தாந்' என்றும், உபநிஷத்தில் உபாஸநா ஸம்பந்தமான உபதேசங்கள் ராமாநுஜாசார்யருடையவும் அவருடைய நூதந ஸம்ஸர்க்கிகளுடையவும் அநுஷ்டாநங்களில் நிலைத்தனவோ?

டகவத்ரூபங்கள்; பரலோகம்.

ராமாநுஜாசார்யர், "காயத்ரிமந்த்ரஜபம் செய்கின்றவன் சதுர்புஜங்களுடனும் ஸரஸிஜாஸந நிவிஷ்டமாயும், அநேக பூஷணாலங்க்ருதமாயும் ஒரு விக்ரஹத்தை நினைக்கும்படிச் சொல்லப்படுகின்றான் வைகுண்டம் எனப்பட்ட ஒரு ஸ்தாந விசேஷத்தில் பகவான் (God) இருக்கின்றானென்றும், அவதார மூலமாகக் கீழே வந்து அதனுடைய கார்யம் முடிவுபெற்ற பிறகு

அங்கே திரும்பப் போகின்றனென்றும் யோசனை ஆழ்ந்து வேர் ஊன்றியது. விக்ரஹோபாஸனை விஸ்தரித்து வளர்கின்றது. அஜ்ஞர்களுடைய மநஸ்ஸுக்களை தேவதை (Deity) யினிடம் செலுத்த அது உதவினபோதிலும், அது ஒரு கெட்ட விளைவையும் உண்டாக்குகின்றது. அது பஹு மநுஷ்யர் மநஸ்ஸில் பகவானை (God) ஓரிடத்தனுக்கி அவர்கள் அவனுடைய ஸர்வத்ர இருப்பை அறிவதற்குக் கஷ்டம் தருகின்றது.'' என்றும் உபந்யஸித்தனர். 'ஸம்ஸமநுஜா ஜோஷமக்ஷா ஹவந்தி' என்று ஸத்யமாகச் சொன்ஞர்கள். பகவான் அவதரிக்கும்போது வைகுண்டம் காலியானதாக நம்முடைய மத க்ரந்தங்களில் எங்கு ராமாநுஜாசார்யர் கண்டாரோ? அவருக்குத் தத்காலம் பரமகுருவாயிருக்கின்ற பெஸண்டு தொரைஸானி அவதாரங்களை நிஷேதித்தாளோ? பகவான் ஸர்வத்ர ஸமனுய் இருப்பதைத் தியாஸபி கண்டதா? அல்லது ஹிந்துமதம் பூர்வமே வெளியிட்டதா? மற்ற விஷயங்களில் போல் மதவிஷயத்திலும் அதிகாரி பேதம் உண்டு. 'யஸ்து ஸர்வாணி பூதாநி ஆத்மந்யேவாநுபச்யதி । ஸர்வபூதேஷு சாத்மாநம்', என்றது ஸர்வாதிகார விஷயமா? 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே । வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:', என்கிறபடி ஸர்வத்ர பரமாத்ம ஸாக்ஷாத்காரம் செய்து, ராமாநுஜாசார்யரும் அவருடைய நாதந ஸுஹ்ருத்துக்களும் சோகமோஹங்களை யெல்லாம் கடந்தனரோ? 'ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே', என்று உபாஸகனுக்கு ஸூர்யமண்டலாந்தர்கதனுன புண்டரீகாக்ஷன் த்ருச்யனுயிருப்பதாக உபநிஷத் சொன்னபடியை ராமாநுஜாசார்யர் கடந்தனரோ? இன்னும் யார்தான் கடந்தாரோ? இனி 'ஸந்த்யாமுபாஸதே யே து ஸததம் ஸம்சிதவ்ரதா:', என்று ஸந்த்யாகால த்யானம் ராமாநுஜாசார்யர் அநுமதியில் நடக்கவேண்டாம். 'ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா', என்று முண்டகோபநிஷத் சொன்னதும், 'தேஜோ ந: பாஹீதி தஸ்மிந் ஸர்வம்'

என்று கடோபநிஷத் சொன்னதும், 'யோ வா ஏதாமேவம் வேத அபஹத்ய பாப்மாநம் அநந்தே ஸ்வர்கே லோகே ஜ்யேயே ப்ரதிதிஷ்டதி' என்று கேநோபநிஷத் சொன்னதும், 'யத்தத் கவயோ வேதயந்தே । தமோங்காரேணைவாயதநேநாந்வேதி வித்வாந் யத்தச் சாந்தமஜரமம்ருதமபயம் பரம் சேதி ॥' என்று ப்ரஶ்நோபநிஷத் சொன்னதும், 'யத்ர தத் ஸத்யஸ்ய பரமம் நிதாநம், பராத் பரம் புருஷமுபைதி திவ்யம்,' என்று முண்டகோபநிஷத் சொன்னதும், 'தத் புருஷோ மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகாந் கமயதி, தேஷு ப்ரஹ்மலோகேஷு பரா: பராவதோ வஸந்தி, தேஷாம் ந புநராவ்ருத்தி:,' என்று ப்ருஹதாரண்யகோபநிஷத் சொன்னதும், 'ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி, ஏஷ ஸம்ப்ரஸாதோ஽ஸ்மாச் சரீராத் ஸமுத்தாய, பரம் ஜ்யோதிருபஸம்பத்ய, ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே, [illegible] .... [illegible] பவதி, [illegible] ஸ தத்ர பர்யேதி,' என்று சாந்தோக்ய ஶ்ருதி சொன்னதும், ப்ரஹ்மவித்தானவன் சரீரபதநாநந்தரம் ஸூர்யத்வார மூலமாக வைகுண்டமெனப்பட்ட தேசவிசேஷத்துக்குச் செல்கின்றான் என்றும், அங்கே பகவான் நித்யவாஸம் செய்கின்றானென்பதையும் ஸ்தாபிக்கவில்லையா? அங்கே பகவான் முக்தபோக்யனாய் இருக்கும் காரணம் ஒன்றாலே, லோகாந்தரங்களில் அவன் இருப்பை மறப்பதெனும் வார்த்தை ஸரியாமோ? முக்தன் விஷயமாக ஶ்ருதியானது, 'காமாந்நீ' என்றும், 'காமரூபீ' என்றும், 'ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி' என்றும், 'ஸோ஽ஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா' என்றும் சொல்கின்றபடியால், கர்மசரீரத்தைப் போலின்றி இச்சாக்ருஹீதங்களாய், ஶுத்தஸத்வமயங்களாய், பகவத்கைங்கர்யார்த்தம் முக்தர்களால் வேண்டப்பட்டவையான சரீரங்களின் உண்மை அநுமிக்கப்படவில்லையா? கீதாஶாஸ்த்ரத்திலும் 'பரம் புருஷம் திவ்யம் யாதி

[illegible] ..... [illegible] ..... [illegible],' எனும்வசநங்கள் முக்தப்ராப்யமான தேசவிசேஷத்தையும், அதில் ப்ராப்யபூதனான பகவானையும் நன்றாகச் சொல்லவில்லையா? '[illegible]' எனும் வாக்யார்த்தமாக ஸ்ரீ ஶங்கராசார்யரும் '[illegible],' என்று எழுதினான்றோ? இப்படிப்பட்ட ப்ரமாணங்களை வி. கே. ராமாநுஜாசார்யர் அதிக்ரமித்தனரோ?

ஸர்வத்ர பகவான் இருப்பது ஸத்யமே. '[illegible]' என்று ஶ்ருதி மொழிந்தது; '[illegible]', என்றும் மொழிந்தது. இவை முமுக்ஷுக்கள் அறியவேண்டிய உண்மைகள். ஆனால் வேதாந்த வித்யைகள் யாவும் ப்ரஹ்மோபாஸ்தி செய்கின்றவன் ப்ரஹ்மத்தைச் சில ரூபகுண விஶிஷ்டனாகவும், சிற்சில ப்ரதேசஸ்திதனாகவும் த்யானம் செய்யவேண்டுமென விதிக்கின்றன. அந்தர்யாமியை த்யானிக்கின்ற விஷயத்தில் '[illegible] ।' என்கிறபடி, அஷ்டாங்கயோகத்தில் ஸித்திபெற்ற யோகிகளே அதிகாரிகளெனப்பட்டனர். இப்படிப்பட்ட யோகி ஒருவனைச் சுட்டிக் காட்ட இக்காலம் அமையாது. '[illegible],' எனும் ஶ்ருத்யநுஸாரிகளாய், அவர்களும் தம்தம் ஹ்ருதயத்தில் நிலைத்த பரமேஸ்வரனை த்யானிப்பார்கள். அந்த த்யானாரம்பத்தை விவரிக்குமிடம், '[illegible] । [illegible]

தத்ரூபப்ரத்யயே சைகா ஸந்ததிஸ்சாந்யநிஸ்ப்ருஹா ॥ .... தத்த்யாநம் ப்ரதமைரங்கை: ஷட்பிர் நிஷ்பாத்யதே ந்ருப ॥ ப்ரஸந்நவதநம் சாருபத்மபத்ரோபமேக்ஷணம் । .... ஸமகர்ணாந்தவிந்யஸ்த சாருகர்ணவிபூஷணம் । கம்புக்ரீவம் ஸுவிஸ்தீர்ண ஸ்ரீவத்ஸாங்கிதவக்ஷஸம் ॥ .... ப்ரலம்பாஷ்டபுஜம் விஷ்ணுமதவாபி சதுர்புஜம் । சிந்தயேத் ப்ரஹ்மபூதம் தம் பீதநிர்மலவாஸஸம் ॥ கிரீடஹாரகேயூர கடகாதிவிபூஷிதம் । ஶார்ங்கஶங்ககதாகட்க சக்ராக்ஷவலயாந்விதம் । வரதாபயஹஸ்தம் ச .... । சிந்தயேத் தந்மயோ யோகீ ஸமாதாயாத்மமாநஸம் । தாவத்யாவத் த்ருடீபூதா தத்ரைவ ந்ருப தாரணா ।' என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண ஶ்லோகங்கள் யோசிக்கத்தக்கன. அவை, நாம் பகவத் ஸந்நிதிகளில் தர்சிக்கின்றபடியே, யோகத்தில் உபக்ரமிக்கின்றவர்களும் ஹ்ருதயகமலத்தில் மூர்த்தி த்யாநம் செய்யவேண்டுமென்று காட்டுகின்றன. சென்றாலும், இருந்தாலும், வேறொரு கார்யம் செய்தாலும் அந்த ரூபம் சித்தத்தினின்று விலகாமல் நின்றால் தாரணை ஸித்தித்ததென்றும், பிறகு பகவானை ஆயுதங்களின்றி த்யாநிக்கவேண்டுமென்றும், அது ஹ்ருதயத்தில்நிலைத்தபின் பூஷணங்களை நீக்கித்யாநிக்க வேண்டுமென்றும், பிறகு ப்ரத்யங்க த்யாநமும், முடிவில் ப்ரதாநாங்கமான ஸுஸ்மித திருமுகமண்டல த்யாநமும் செய்யவேண்டுமென்றும், பிறகு இவ்வவயவங்களையும் அஸ்த்ரபூஷணாதிகளையும் பக்தாநுகம்பையால் ஆவிஷ்கரித்த பகவானுடைய ஸ்வரூபத்தை த்யாநித்து அது ஒரு விஜாதீய ப்ரத்யய ரூபமான அந்தராயமின்றி ஒரே ஸந்ததியாக வளரும்போது த்யாநமெனும் யோகாங்கம் நிஷ்பந்நமாகுமென்றும் யோசிக்கப்படுகின்றது.

இந்த யோகத்தின் பூர்வாங்கங்களில் ஶ்ரமப்படுபவர்கள் இருக்கலாம். புஸ்தகங்களைப் படித்துவிட்டு யோகம்செய்ய ஆரம்பிப்பவர்கள் க்லேசப்படுவார்கள். ஆசார்யஸஹாயமின்றி யோகத்தில் காலிடுதல் யுக்தமன்று. பரமார்த்த ஸமக்ர பக்தியோக நிஷ்டரான ஸ்ரீமந்நாதமுனிகளுடைய ஸாக்ஷாத் உபதேசத்தைப் பெறாமல்

போய் ஸ்ரீயாமுனுசார்யர் யோகத்தில் உபக்ரமத்தைத் தவிர்த்தார்; தமது பூர்வீகர்களுள் நிஷ்பந்நயோகிகள் பலர் இருந்தும், தமக்கு யோகஸம்பந்த மற்றுப்போன விஷயத்தில் மிகவும் துக்கித்துப்போய், 'ஜநிஷ்யாஷம்வம்ஶெ ஜஹதி ஜமதிவ்ராதயஶஸா, ஶம்ஸீநாம் யஹ்ஸ்தநாம்' என்று அவர்கள் மேன்மையையும், 'வொவொத்ரா நிஜ்ஜாதி கவேஸி' என்று தமது தைந்யத்தையையும் ஆவிஷ்கரித்தாரன்றோ? ஸ்ரீ பாஷ்யகாரரும், ஸ்ரீ நிகமாந்த தேசிகனும், அவர் காட்டிய ஶரணுகதியை மோக்ஷோபாயமாக அவலம்பித்து, யோகத்தைக் குறித்து ஆசார்யாபாவத்தால் வ்ருதா ப்ரமம் பூண்டார்களில்லையே!

இந்த மஹான்கள் விட்டொழிந்த மார்க்கம் ராமாநுஜாசார்யர்க்குக் கிட்டிற்றே? கிட்டினதானுலும் ஹ்ருதயபாவச்சிந்னுன மூர்த்தியினுடையவோ, மற்றோர் தேசத்தில் ஆவிர்பவிக்கும் மூர்த்தியினுடையவோ த்யாநம்தானே கிடைக்கும். தேசத்தாலும் காலத்தாலும் வஸ்த்வந்தரத்தாலும் பரிச்சேத ரஹிதமான ஸ்வரூபத்தை இது இப்படியென்று அறிந்து உபாஸிக்க வொண்ணுமோ? அந்த உண்மையை உபாஸகன் அறியவேண்டுமென்று ஶ்ருதியின் தாத்பர்யம். அதன் ப்ரயோஜநம் ஶாந்தி, ஸர்வகாமங்களையும் விட்டொழிதல், லோக விஷய த்யாநத்தினின்று விலகல், அஹங்கார மமகார ஹாநி, பரஹிதத்தில் ப்ரவ்ருத்தி; இத்யாதி ஸாமக்ரியுக்தனுய் முமுக்ஷுவானவன் ப்ரஹ்மத்தை உபாஸிக்கக்கடவன்; உபாஸனையானது உபாஸ்ய ரூபமின்றி உண்டாகாது; யமநியமாதி ஸாதநங்களின்றியும் உண்டாகமாட்டாது. இந்த விஷயங்களையெல்லாம் ராமாநுஜாசார்யர் யோசித்தாரோ?

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஸிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

வேதாந்த ஸங்க்ரஹம்.

பகவான் தான் ஜகத்காரணம் என்று, ஸாதாரணமாய் மிகவும் எளிதில் பொருள்படக்கூடிய மிகத் தெளிவான அநேக ச்ருதிகளைக் கொண்டும், மூல ப்ரக்ருதியும் ஜீவ ஸமுதாயமும் ஜகத் காரணமாக மாட்டா என்றும், அவ்விருவகை ச்ருதிகளும் பகவானுடைய கல்யாண குணங்களை வெளியிடுகின்றனவென்றும், வேதாந்த ஸூத்ரம் முதலிரண்டு பாதங்களில் உதாஹரிக்கப்பட்ட வேத வாக்யங்களைக் குறித்து இதுவரையில் சொன்னேம். இவ்வளவு தெளிவில்லாத வாக்யங்கள் 3, 4 பாதங்களில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

த்யுப்வாத்யதிகரணம்.

இரண்டாம் பாதத்தில் கடைசியில் சொல்லியபடி, த்ரிலோகத்தையும் தனக்கு அவயவமாக உடையவனாய், எல்லாவற்றிலும் வ்யாபித்து நியந்த்ருத்வத்தையுடைய பரமாத்மா, (3-ம் பாதத்தில் முதலில் எடுக்கப்பட்ட முண்டகோபநிஷத் பின்பாக ச்ருதிகளின்படி) 'அம்ருதஸ்யைஷ ஸேது:' [முண்-II. 2-5] என்று ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தைத் தாண்டி மோக்ஷத்துக்குத் தானே உபாயமாக அழைத்துக்கொண்டு போகுமவன். அவன் 'தமஸ: பரஸ்தாத்' என்கிறபடி ப்ரக்ருதிக்கு அப்புறப்பட்டவன்; மேற்பட்டவன்; ஜ்ஞாநிகளின் ஹ்ருதயத்தில் அவர்கள் கோரினபடி 'பஹுதா ஜாயமாந:' என்று பஹு ப்ரகாரமாக திவ்ய மங்கள விக்ரஹத்துடன் ஸேவை ஸாதிப்பவன். இவன், 'அஜாயமாநோ பஹுதா விஜாயதே' என்கிறபடி பிறப்பில்லாதவன்.

தேவ மநுஷ்யர்கள் தம்மை ஆஶ்ரயித்துத் தமது குணங்களேயும் சேஷ்டைகளேயும் அநுபவிக்கும்பொருட்டு மநுஷ்யாதி அவதாரங்களேச் செய்கிருன். அப்படிச் செய்யும்போது "ஆதியஞ் சோதி யுருவை யங்கு வைத்திங்குப் பிறந்தவன்". இன்னெருவனுக்கு இல்லாத, தனக்கு மாத்திரமே யுள்ள, ப்ரக்ருதி ஸம்பந்தமற்ற திவ்ய ரூபமுள்ள திவ்ய திருமேனியை மநுஷ்யன் முதலிய அவதாரத்துக்குத் தக்கபடி பரிக்ரஹிக்கிருன். அது கர்மப்பயனல் அடைந்ததல்ல; கேவலம் தன் க்ருபையாலும் இச்சையாலுமே பரிக்ரஹித்தது. இவ்வர்த்தம், "அஜோபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோபி ஸந் । ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா" என்று ஸ்ரீ கீதையில் 4-ம் அத்யாயத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. "தமேவம் விதுவாந் அம்ருத இஹ பவதி" என்கிறபடி அகர்மவஶ்யனும் மஹா தேஜோமயனும் பகவான் ப்ரகாஶிக்கிருன் என்று முன்னமேயே ஸர்வத்ராதிகரணத்தில் சொன்னேம்.

'தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்' என்று, இப்படி அவதாரங்களிலும் அந்தந்த சேஷ்டிதங்களிலும் மஹா பக்தர்களாகிற ஜ்ஞாநிகள் "பரிஜாநந்தி" சூழ்ந்துகொண்டிருக்கிருர்கள். ஜ்ஞாநிகளில் தலைவரான நம்மாழ்வார், கண்ணனுடைய நவநீத சௌர்யத்திலும், கண்ணிநுண் சிறுத்தாம்பினுல் கட்டுப்படும்படி இருந்த அவனுடைய மஹா எளிவிலும் (ஸௌலப்யம்) ஈடுபட்டு "எத்திறம் உரலினே டிணைந்திருந் தேங்கிய வெளிவே!" என்று ஆறு மாஸம் மோஹித்துக் கிடந்தபடி, ஜ்ஞாநிகள், அவதாரங்களில் சூழ்ந்து மோஹித்துக் கிடப்பார்கள். ["ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ அநீஶயா ஶோசதி முஹ்யமாந: । ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக:"]; ஜீவன் ப்ரக்ருதியால் மயக்கப்பட்டு ஶோகத்தில் மூழ்கிக் கிடக்கிருன்; ஸர்வ நியந்தாவும் பக்த பராதீநனுமான பகவானுடைய ஸ்வரூபம், மஹிமை, இவை யெல்லாம் தெரிந்திருந்தும் அவனுக்கு ஸகல ஶோகமும் போகின்றன. (முண்-III. 1-2)

ஆனந்தமான அழிவில்லாத பகவத் ஸ்வரூபத்தைத் தர்ஶந ஸமாந ரூபமான பரம பக்தியாகிற ஜ்ஞாநத்தால் [‘தத்விஜ்ஞாநேந பரிபஶ்யந்தி தீரா: ஆநந்தரூபமம்ருதம் யத்விபாதி’] ஜ்ஞாநிகள் ஸாக்ஷாத்கரித்து நன்றாய் அநுபவிக்கிறார்கள்; இவர்களினுடைய ஸகல பாபங்களும் நஶிக்கின்றன. [‘க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி’] ஜ்யோதிகளுக்கெல்லாம் ஜ்யோதியைக் கொடுக்கிறவன். [‘ஜ்யோதிஷாம் ஜ்யோதி:’] பரமபதத்தில் பகவானே ஒளியைக் கொடுப்பவன். ஸூர்ய சந்த்ரர்கள் அங்கே ப்ரகாஶிப்பதில்லை. அவர்களுக்கும் இவனே ப்ரகாஶம் கொடுப்பவன். [“ந தத்ர ஸூர்யோ பாதி [illegible]”] அந்தப் பரமபதத்தை, பரம பக்தனாகிற ஜ்ஞாநி அடைகிறான். இவன், முக்தர்கள் அடையும்படியான போக்ய வஸ்து. [ப்ராப்யம்] [“யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோநிம் । ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி”] [முண்-III. 1-(1-3)] இப்படி ஸகலத்துக்கும் காரணமாய், நிர்வாஹகனாய், தேஜோமயனாய், ஆழ்வார்கள் ‘பொன்மேனி கண்டேன்’, ‘பொன்னிவர் மேனி’, ‘பொன்னே திகழும் திருமூர்த்தி’ என்று அநுபவிக்கிற திவ்ய ரூபத்தையுடைய பகவானை நேராக நன்றாய்த் தர்ஶித்து அநுபவிக்கவே, அந்த ஜ்ஞாநி, தன் பாபங்களை யெல்லாம் உதறிவிட்டு, “பரமம் ஸாம்யமுபைதி” என்றபடி, “தம்மையே யொக்க அருள் செய்வார்”, “சமன்கொள் வீடு தரும்” என்று ஆழ்வார்கள் அருளிச் செய்திருக்கிற பகவதநுபவத்தை யடைகிறான். “யதா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே அஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய । ததா வித்வாந் நாமரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்” [முண்-III. 2-8] என்று, நதிகள் ஸமுத்ரத்தில் ஸங்கமமாகி முன்னைய பேர், ரூபம் இவை போய் ஸமுத்ரத்தைச் சேருகிறதோ, அப்படி எல்லாவற்றுக்கும் மேலான புருஷோத்தமனை அடைந்து, ப்ரக்ருதி ஸம்பந்தமான நாமரூபம் போய்ப் பாபங்களினின்றும் விடுபட்டு “என் ஆவாவறச் சூழ்ந்தாய்” என்று திருவருளில் மூழ்கி யிருக்கிறான் ஜ்ஞாநி.

கேவலம் ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தாலாவது மநநம், த்யாநம் முதலியவற்ருலாவது பகவானை அடைய முடியாது. அவனே நமக்கு உபாயம்; உபேயம்; அடையவேண்டிய (நாம் கோரும்) போக்ய வஸ்து. அவன் க்ருபையே முக்ய காரணம் என்று தெரிந்து, மஹா பரமபக்திரூபமான ஜ்ஞாநத்தால் தான் அவனை அடையவேணும் என்று, "நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூꣳ ஸ்வாம்" என முன் கடவல்லி ஶ்ருதியிலிருந்து அத்ராதிகரணத்தில் குறித்த ஶ்ருதியை வேதபுருஷன் தன்னுடைய வெகு ஆதரமானது இந்த அர்த்தத்தில் தோன்ற வேண்டுமென்று மறுபடியும் முண்டகோபநிஷத்தில் வெளியிட்டிருக்கிருனென்பது ப்ரஸித்தம். [(முண்.III-2-3) (கட-II-23)].

இந்த முண்டகோபநிஷத்தில் ப்ருதிவீ முதலானவைகளும், மநஸ், ப்ராணன் இவைகளும் எவனிடத்தில் கோக்கப்பட்டிருக்கின்றனவோ, ["யஸ்மிந்........ப்ராணைஶ்ச .... தமேவைகம் ஜாநத ஆத்மாநம் அந்யா வாசோ விமுஞ்சதாம்ருதஸ்யைஷ ஸேது:" (முண்-II-2-5)], அவனே நமக்கு ஸம்ஸாரத்தைத் தாண்ட உபாயம் என்றும், (முண்-II-2-5), "ப்ராணோ ஹ்யேஷ ய: ஸர்வபூதைர் விபாதி விஜாநந் வித்வாந் பவதே நாதிவாதீ" (முண்-III-1-4) என்றும், எந்தப் பரமபுருஷன் ஸம்ஸ்த பூதங்களாலும் ஆஶ்ரயிக்கப்பட்டவனுய் எல்லாவற்றுக்கும் ப்ராணனுன பரமாத்மாவோ, அவன் விஷயத்தில் பக்தனுய் அதிவாதியாகவேண்டும் என்று சொல்லப்பட்டது. பரமாத்மா விஷயத்தில் அதிவாதியாய் இருக்கும் விஷயம் சாந்தோக்யத்தில் 7-வது ப்ரபாடகத்தில் பூமவித்யையில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கொஞ்சம் சொல்வோம். இது நாரதருக்கு ஸநத்குமாரர் அருளிச்செய்கிருர்.

பகவான், 'ஆத்மைவேதꣳ ஸர்வமிதி ஸ ஏவ அதஸ்தாத் ஸ உபரிஷ்டாத் ஸ பஶ்சாத்' என்று அவன் எல்லாவற்றுக்கும் அந்தராத்மா; 'ஸ்வே மஹிம்நி' என்று எல்லாவற்றுக்கும் அவன் ஆதாரம்; ஒன்றை, தனக்கு ஆதாரமாக உடையவனல்லன; (சாந்-VII

பூமாதிகரணம்.

25-2) "ஆத்மத: ப்ராண இதி ஸர்வமாத்மத:". தான் ஸகலத்தையும் படைப்பவன்; அவனின்றும் ஜீவன் உண்டாகிறது. "ப்ராணோ ஹ்யேவைதாநி ஸர்வாணி பவதி ஸ வா ஏஷ ஏவம் பச்யந் ஏவம் மந்வாந ஏவம் விஜாநந் அதிவாதீ பவதி" (சாந்-VII - 15-4) என்று ஜீவாத்மாவை நன்ருய் அறிந்து ஸாக்ஷாத்கரிப்பவன் அதிவாதியென்றும், இவனை விட ப்ருஹ்ம நிஷ்டன் உயர்ந்த அதிவாதியென்றும் ["ஏஷ து வா அதிவததி ய: ஸத்யேந அதிவததி"] சொல்லப்படுகிருர்கள். "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்" என்பதில் சொல்வதுபோல் 'ஸத்யம்' என்னும் ஶப்தத்தால் குறிக்கப்பட்ட பகவான் விஷயமாய் ஒருவன் அதிவாதியாக வேண்டும். அதாவது: அவன் தவிர உபாயம் உபேயம் வேறில்லை யென்று எப்போழ்தும் இருக்கவேண்டும். அப்படி யிருப்பதற்குப் பகவத் பக்தியாகிற உபாஸநம் ["ஸத்யம் த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யம் விஜ்ஞாநந்த்வேவ" என்று] உபதேசிக்கப்பட்டு, இப்படி தர்ஶந ஸமாநமான பக்தி ரூபமான ஸாக்ஷாத்காரத்துக்கு 'மதிஸ்த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யா' என்று பகவான் விஷயத்தில் மநநத்தை உபதேசித்து, அதற்கு வேண்டிய ப்ரயத்ந ரூபமான ஸத்கர்மங்களும் உபதேசிக்கப்படுகின்றன. இப்படி த்யாநம் செய்து பக்வமானுல், 'ஸுகம் த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யம் பூமா த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய:' (VII-18) என்று கணக்கில் அகப்படாத ஸகல கல்யாண குணங்களையுடையனுய் மஹத்தான ஜகதைஶ்வர்யத்தை யுடையவனுயிருக்கும் பகவானுடைய ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்தால், இந்தத் துக்க மிஶ்ரமான ஜகத்தே அவன் விபூதியாய், அவனுக்கு லீலோபகரணமாய், அவனில் அந்தர்க்கதமாய் ஆநந்தமா யிருக்கும். 'யத்ர நாந்யத் பச்யதி நாந்யச் ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா' என்று பகவானை விட்டுப் பிரிக்காமல், எல்லாம் பகவததீநம் என்று தெரிந்து வேறு ஒன்றையும் பாரான்; கேளான்; அறியான்; அது நிரதிஶயாநந்த ஸ்வரூபம். ஸ ஏவ அம்ருதம் அழிவற்றது. இதை ஸாக்ஷாத்கரித்தவன் எல்லா லோகங்களிலும்

தன்னிஷ்டப்படி எங்கும் ஸஞ்சரிப்பவன். அவன் ஸர்வ இஷ்டத்தையும் அடைகிறான். அவன் ஸ்வஸ்வராட் கர்மத்துக்கு உட்பட்டவனல்லன். 'ஸ ஸ்வராட் ப4வதி ஸர்வேஷு லோகேஷு காமசாரோ ப4வதி' என்று வெளியிடப்பட்டது.

இப்படி சாங்தோக்யத்தில் 'ஸ்வே மஹிம்நி' என்று தன்னுடைய மஹிமையால் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக பூமா என்று சொல்லப்பட்ட பகவான், ஸகலத்துக்கும் காரண பூதமாகவும் ஆதாரமாகவும் (ப்ருஹதாரண்யத்தில் கார்க்கி ப்ரச்நத்தில்) அக்ஷரம் என்றும் சொல்லப்படுகிறான்.

அக்ஷராதிகரணம்.

'அக்ஷரம் அம்ப3ராந்தத்4ருதே:' என்கிற ஸூத்ரப்படி ஆகாசம் என்று சொல்லப்படுகிற ஸூக்ஷ்மமான ப்ரக்ருதிக்கு ஆதாரமாகவும், அந்த ஆகாசம் எவனிடத்தில் கோக்கப்பட்டிருக்கின்றதோ அவன்தான் பகவான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ['ஏதத்3வை தத3க்ஷரம் கா3ர்கி3 ப்3ராஹ்மணா அபி4வத3ந்தி'] அவன் ஸ்தூலமில்லாதவன்; அணுவல்லன்; குட்டையாய் இருப்பவனல்லன்; நீளமுமல்லன். 'அஸ்தூ2லம் அநண்வஹ்ரஸ்வம் அதீ3ர்க4ம்' என்றும், 'ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே ... ... ஸூர்யாசந்த்3ரமஸௌ வித்4ருதௌ திஷ்ட2த:' என்றும், இந்த அக்ஷரமென்று சொல்லப்படுகிற பகவானுடைய ஆஜ்ஞையால்தான் சந்த்ர ஸூர்யர்கள், கீழ் உலகு, மேலுலகு முதலான ஸகலமும் தத்தத் ஸ்தாநத்திலிருந்துகொண்டு அவனை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. 'அக்ஷரஸ்ய ப்ரசாஸநே த்3யாவாப்ருதி2வ்யௌ வித்4ருதே திஷ்ட2த:' என்றும், இந்த அக்ஷரமாகிற பகவானை அறிந்து கர்மம் முதலானவைகளைச் செய்பவன்தான் ப்ருஹ்மவித் எனப்படுகிறான். இந்த ஸ்வரூபம் தெரியாமல் செய்கிறவர்கள் ஸம்ஸாரத்தில் உழல்வார்களென்று 'அக்ஷரம் விதி3த்வா அஸ்மால்லோகாத் ப்ரைதி ஸ ப்3ராஹ்மண:' என்றும் சொல்லி, இந்தப்பகவான்தான் பார்க்கப்படாமல், ஸகலத்தையும் தான் பார்த்துக்கொண்டு, அதற்கு ஆதாரமாயுமிருக்கிறான்; கேட்கப்படாமல்

ஸகலமும் தான் கேட்டு அதற்கு ஆதாரமாயும், எல்லாவற்றையும் அறிந்து அதற்கு நிர்வாஹகனாயும் ஆதாரமாயு மிருந்துகொண்டு, ‘சராசரம் எல்லாவற்றுக்கும் காரண பூதன் இவனே; இவனைப் போல் இப்படிப்பட்ட வஸ்து வேறில்லை’ என்று ‘ஸ ஏதத் அக்ஷரம், அத்ருஷ்டம் த்ரஷ்ட்ரு, அஶ்ருதம் ஶ்ரோத்ரு, அமதம் மந்த்ரு .... நாந்யத் அதோஸ்தி த்ரஷ்ட்ரு ... ... ஏதஸ்மிந்நு கல்வக்ஷரே கார்க்யாகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்ச’ என்று முடிக்கப்படுகிறது. (ப்ரு-III. 8-11.)

இப்படியே பரமாத்மாவை நிரந்தர த்யானம் பண்ணுபவன் ப்ருஹ்ம லோகத்தை (அதாவது: மறு பிறவி யில்லாத பரமபதத்தை) அடைந்து, ஶாந்தத்தையும் அழிவற்ற பயமில்லாத பதவியையும் அடைகிறான். ப்ரஶ்நோபநிஷத்தில் ‘ஸ ஸாமபிருந்நீயதே ப்ரஹ்மலோகம் ஸ ஏதஸ்மாஜ் ஜீவகநாத் பராத்பரம் புரிஶயம் புருஷமீக்ஷதே ... ... தமோங்காரேணைவாயதநேநாந்வேதி வித்வாந் யத்தச்சாந்தமஜரமம்ருதமபயம் பரஞ்சேதி’ (ப்ரஶ்ந: V-5-7) என்று அந்த பகவானை ஸாக்ஷாத் கரிக்கிறான்.

இனி, சாந்தோக்யத்தில் 8-வது ப்ரபாடகத்தில் உபதேஶிக்கப்படுகிற விஷயத்தை மிகவும் சுருக்கமாக விவரிப்போம். ‘உபே அஸ்மிந் த்யாவாப்ருதிவீ அந்தரேவ ஸமாஹிதே। உபாவக்நிஶ்ச வாயுஶ்ச ஸூர்யாசந்த்ரமஸாவுபௌ வித்யுந்நக்ஷத்ராணி’. அக்நி, வாயு, ஆகாஶம், சந்த்ரன், ஸூர்யன் முதலியன அடங்கிய ஸகல உலகங்களுமாகிய இந்த ஜகத்தனைத்தும் அவனிடத்தி லிருக்கின்றன. அவனே அவைகட்கு ஆதாரம். ‘ஸதச ஸத்யம் ப்ரஹ்மாயதநம்’ [பரப்ருஹ்மமே ஜகத் காரணம்; இந்த ஜகத்துக்கெல்லாம் இருப்பிடம்] ‘தத்யதா ஹிரண்யநிதிம் நிஹிதமக்ஷேத்ரஜ்ஞா உபர்யுபரி ஸஞ்சரந்தோ ந விந்தேயுரேவமேவேமாஃ ஸர்வாஃ ப்ரஜா அஹரஹர்கச்சந்த்ய ஏதம் ப்ரஹ்மலோகம் ......’ ஸ்வர்ணநிதிப் புதையல் இருக்குமிடம் தெரியாதவர்கள்

தஹராதிகரணம்.

எப்படி அதன்பேரில் நித்யம் ஸஞ்சரித்துக்கொண்டு இருக்கிறார்களோ, அப்படியே ஸகலத்துக்கும் அந்தர்யாமியா யிருப்பவனை அந்தந்த வஸ்துக்கள் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றன. ஸகலத்துக்கும் அந்தராத்மாவாய், ஜகத்காரணமாய் இருக்கும் பகவான், ஜ்ஞாநிகளை அநுக்ரஹிக்கும் பொருட்டு ஹ்ருதயகமலத்தில் திவ்ய மங்கள விக்ரஹத்துடன் எழுந்தருளியிருக்கிறான். அந்த பகவானையும் அவனுடைய ஸமஸ்த கல்யாணகுணங்களையும் நன்றாய்த் தெரிந்து த்யாநம் செய்து பக்வநிலையை யடையவேண்டுமென்று, 'ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத, யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:' என்று இந்த முக்ய வாக்யத்தால் உபதேசிக்கப்படுகிறது.

அந்த பகவான் 'ஸ ஸேதுர்வித்ருதிரேஷாம் லோகாநாமஸம்பேதாயேதி' (VIII-4-1) ஸேது, ஜகத் திண்டாடாமல் அதனதனிடத்தில் இருக்கும்படி நிர்வஹித்துக்கொண்டு, அவனே ஸம்ஸாரத்தைத் தாண்ட உபாயமாயும் உபேயமாயும் இருக்கிறான். இந்த பகவானையும், அவனை ஒட்டிக்கிடக்கிற பிரிக்கமுடியாத அவனுடைய கல்யாணகுணங்களையும் உபாஸித்துப் பக்வநிலை யடைந்து, ['ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யத ஏஷ ஆத்மேதி ஹோவாச'] ஜ்ஞாநியானவன் பகவத் பக்தி பண்ணினால், இந்த ஶரீரம் போனபிறகு பரஞ்ஜோதியான பகவானை ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு மூப்பு துக்கம் முதலியன இல்லாமல் பாபத்தினின்றும் விடுபட்டு நிரதிஶயாநந்தத்தை யடைகிறான். அவனுக்குப் புநர்ஜந்மம் கிடையாது. அவனுக்கு நிறைவேறாத இச்சையும் ஸங்கல்பமும் கிடையா. இந்த பகவதுபாஸநத்துக்கு அங்கமாக ஜீவாத்ம ஜ்ஞாநத்தை ['யஸ்தமாத்மாநமநுவித்ய விஜாநாதி'] ப்ரஜாபதி இந்த்ரனுக்கு உபதேஶிக்கிறார். விழிப்பு, ஸ்வப்நம், தூக்கம் இவை மூன்றும் கடந்த ஶுத்த ஜீவாத்ம ஸ்வரூபத்துக்குத் துக்கம் ஶோகம் என்பன கிடையா; பிறப்பும் இறப்பும் இல்லை. அது ஆநந்த ஸ்வரூபம். துக்கம், ஶோகம், மூப்பு, இறப்பு இவையெல்லாம் தேஹத்தைச் சேர்ந்த

வை. உபாஸகன், தேஹமே ஆத்மாவென்கிற ப்ரமத்தை விட்டு பரிசுத்தமான ஜீவஸ்வரூபத்தை நன்குயறிந்து ஸாக்ஷாத்கரித்து, இந்த ஜீவனுக்கு அந்தர்யாமியாயும், அவனுக்கு மேலான உபேயமாயும் இருக்கும் ப்ருஹ்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்தல் மோக்ஷம் என்றாயிற்று. 'ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோ அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:' என்று மேலே விவரித்தபடி பேரானந்தத்தை யடைகிறான்.

'இப்படி ஹ்ருதய கமலத்திலிருக்கும் ஸகல ஹேய ப்ரத்யநீக கல்யாண குணாத்மகனான பகவான் தஹராகாஶம் என்று சொல்லப்படுவன்; ஸகல ஜகத் ஸ்ருஷ்டி செய்து நாமரூப முண்டாக்குபவன்,' என்று 'ஆகாஶோ, வை, நாம நாமரூபயோர் நிர்வஹிதா ... ... ஸ ஆத்மா (VII - 14) 'அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ருஹ்மஜ்ஞானி, 'அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர் முகாத் ப்ரமுச்ய। தூத்வா ஶரீரம் அக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகம் அபிஸம்பவாமி' என்று ராஹுவினின்றும் சந்த்ரன் விடுபட்டாற்போலவும், குதிரை மயிரை யுதிர்க்கிறாற்போலவும் இந்த ஶரீரத்தைவிட்டு, ஜ்ஞானி பாபத்தினின்று விடுபட்டுப் பகவானை யடைகிறான்.

இப்படி ஸகலாந்தர்யாமியா யிருப்பவன் அங்குஷ்ட அளவையுடையவனாய் திவ்ய மங்கள விக்ரஹத்துடன் ஹ்ருதய கமலத்தில் க்ருபைகூர்ந்து எழுந்தருளியிருக்கிறான். அவன் ஸகலத்துக்கும் நிர்வாஹகன்; அதிபதி. கடவல்லியில் 'அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி ஈஶாநோ பூதபவ்யஸ்ய...' என்றும் 'ஜ்யோதிஷாம் ஜ்யோதி:' என்றும் சொல்லப்படுவன். பகவன் ஸகலத்துக்கும் அதிபதி. 'ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந: ... ... ஸர்வேஶ்வர ... ... ஏஷ பூதாதிபதி ஏஷ பூதபால:' என்று ப்ருஹதாரண்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக 3-ம் பாதத்தில் எடுக்கப்பட்ட முக்ய ஶ்ருதிகளின் அர்த்தம் சுருக்கிச் சொல்லப்பட்டது.

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்வாகத நிவேதந பத்ரிகை. *

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையோர்களுக்கு :—

திருக்கண்டியூர் ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸம்வர்த்திநீ ஸபையோர்கள் ஸமர்ப்பித்த ஸ்வாகத நிவேதந பத்ரிகா.

நமஸ்ஸமஸ்தேப்யஸ் ஸாதுபக்தேப்ய:

ஆர்ய மித்ரா:!

“ க்ருஷ்ண விஹதி உபேக்ஷ்யபாபாஸாஹி ஸம்ஸ்ரிதஸர்வதேவதா நிரஞ்ஜநமீசமவேத்ய ஸந்ததம் ஸக்தஸ்ஸ்ரீ ஸந்தாஸிரு: । ப்ராயேண யத்ர ஸ்ரீஸத்ரம் யஸ்யஸம்பந்நநாஸ் ப்ரஸ்ரித க்ருஷ்ணாஷ்டாண: பாதரவேக நாய: ॥ ”

“ கண்டோம்கண்டோம்கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம்
தொண்டீரெல்லீரும்வாரீர் தொழுதுதொழுதுநின்றார்த்தும்
வண்டார்தண்ணந்துழாயான் மாதவன்பூதங்கள், மண்மேல்
பண்டான்பாடிநின்றாடிப் பரந்துதிரிகின்றனவே ”

‘ இருள்தருமா ஞாலத்துள் ’ என்று தேசத்தின் துஷ்டதையை ஆழ்வார்களும், ‘ கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஸ்வரம் । நார்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா: ’ என்று காலஸ்வபாவத்தை ருஷிகளும் அருளிச்செய்த ப்ர

[* இது, சென்ற மார்கழி மாஸத்தில் திருக்கண்டியூரில் நடைபெற்ற மஹாஸங்கத்தில், ஸ்ரீ. உப. எஸ். வேதாந்தாசார்யராற் செய்யப்பட்ட ஸ்வாகத நிவேதந பத்ரிகை.]

காரம் இவ்வுலக ஸ்திதியிருக்க, அதில், 'ஆவிதிகைக்க ஐவர்குமைக்கும் சிற்றின்பம்' என்றபடியே துஷ்டங்களான கரணகளேபரங்களோடு அவைகளுக்கு ஆகர்ஷகங்களான ஶப்தாதி விஷயங்களுக்கு நடுவில், 'ஜாநகீ விஷண்ணா ஹி வஸீதேவ ராக்ஷஸீபி:', 'ராக்ஷஸீவஶமாபந்நா' இத்யாதிகளிற் படியாயிற்று இச்சேதனனிருப்பு. ஆகையாலிறே இந்த ஸம்ஸாரத்தை 'ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய' என்று சொன்னார்கள். அஶோகவநிகா மத்யையான பிராட்டி அநுஷ்டித்துக் காட்டியதுபோல 'தைந்யாவஸ்தி ராக்ஷஸ்யா தேநாநுவக்ஷ ஸம்ஸ்ரதாநு । ஸகத்ரூஸ ஸ்த்ருஷ்யா நஷ்டம் ராமேஶ்வராநம் வஸ்யதி' 'ஸங்க்ஷவ ஹயஸம்யமே தோக்ஷயநாஷீவ ஶதநாரமேய:' என்றபடி அநந்யமான பகவத்பக்தி உண்டாக வேணுமென்பதையும், அவன் கடாக்ஷமடியாகப் பிராட்டிக்கு ஹநுமத்ஸமாகமம்போல் நமக்கு பாகவத ஸமாகமம் நேருகிறதென்பதையும் 'க்ஷாவிஷ்டஸ்ய வைஹக்தி ஹஸ்தேக்ஷ வநாஸநாமத:' என்று அருளிச்செய்தார்கள். இவை யிரண்டும் பரமபோக்யமானவை என்பது 'தேவஸ்ய ம்ருததாவதே' என்ற உபமானத்தால் காட்டப்பட்டது. 'விஷவ்ருக்ஷத்தில் அம்ருதபலங்கள்' என்ற ஸாத்ருஶ்யத்தால் ஆர்த்தமாயும், 'க்ஷாவிக' என்பதால் ஶாப்தமாயும் ஸூசிதமான பகவத்பக்தி, பாகவத ஸம்ருத்திகளின் தளக்ஷயம் தளமூஹ்யங்களை 'தமூஹ்மோஹாநம்ஷா தேவஹா தேஹிநாம் க்ஷணஸம்பர:। ததாவி தமூஹம் ஜேநபவேகம் விருபதஶம்' என்னும் ஶ்லோகத்தால் விஶதீகரித்தார்கள். இந்த லீலாவிபூதியில் பகவத்பரதை உண்டாவது இவ்வளவு துஷ்கரமானதால் "பாற்கடற்பாம்பணைமேற் பள்ளிகொண்டருளும் சீதனையேதொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" என்று பாகவதரை நித்ய ஸூரிகளைக்காட்டில் மேலாக வ்யவஹரித்தார்கள். பகவத்பக்தி, பாகவதஸங்கம் இவை யிரண்டிலும் பாகவத ஸங்கமே இவ்வுலகத்தில் அதிகாநந்தாவஹம். பிராட்டி அநு

ந்ய மநஸ்கையாய் பகவானைச் சிந்தித்தும் ஹநுமத் ஸமாகம ஸல்லாபாதிகளில் ஆநந்த பரவசையானாளிறே. "ஸித்திர்பவதி வா நேதி ஸம்ஶயோ அச்யுதஸேவிநாம் । ந ஸம்ஶயோஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநாம் । ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம் । தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம்" இத்யாதிகளிலும் பாகவத கைங்கர்யத்தின் ஏற்றம் பாக்க அருளிச்செய்யப்பட்டது. ப்ரபந்ந ஜநஸந்தாந கூடஸ்தரான ஆழ்வாரும் இவ்வநுபவத்தையே ப்ரபந்தத்தின் அடியிலும், நடுவிலும், 'பயிலும் சுடரொளி', 'நெடுமாற்கடிமை' இத்யாதிகளால் அநுஸந்தித்து, முடிவிலும் 'வந்தவரெதிர்கொள்ள மாமணிமண்டபத்து, அந்தமில் பேரின்பத்தடியரோ டிருந்தமை' என்று இதையே பரமபலமாகத் தலைக்கட்டிப்போந்தார். பாகவத ஸம்பந்தம் ஆத்மாநுபந்தியானதால் நித்யமென்றும், இந்த ஸம்பந்தம் பெற்றால் பகவானுக்கு இஷ்ட விநியோக மாகும்படி ஏற்படுவதால் விசேஷ பகவந் முகோல்லாஸகரமென்றும் அறுதியிட்டுப் அதை புருஷார்த்த காஷ்டை யென்றும், பகவ தநுபவத்திற்கு எல்லை நிலமென்றும் பூர்வாசார்யர்கள் கொண்டாடினார்கள். இப்படிப்பட்ட ஸம்பந்தத்தை நமக்கு விசேஷமாக அளித்து 'ஊரும் நாடு முலகமும் தன்னைப்போல்' என்றபடி ஸகலரும் உஜ்ஜீவிக்கும்படி ஆங்காங்கு 'நின்றாடிப்பாடிப் பரந்து திரிகின்றனவே' என்று சொல்லலாம்படி, பத்ரிகை, ஸங்கம், இவைகள் மூலமாய்ச் சேதநர்களை அநுகாஹித்துவரும் இந்த 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை' யோர்களுக்கு இவ்வேழாவது மஹாஸமாஜத்தை அடியோங்கள் மத்தியில் நடத்த மிகுந்த வணக்கத்துடனும், ஆதரவுடனும் நல்வரவு கூறுகிறோம். ஸ்ரீரங்காதி திவ்ய க்ஷேத்ரங்களிருக்கச் செய்தேயும் 'வ்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்டகர்மணா । ஶுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா ॥' என்றபடி பகவான் தன் அவ்யாஜக்ருபையால் கோகுலத்தைப்

பரிக்ரஹித்தாற்போல் அகிஞ்சநர்களான அடியோங்களிருக்கும் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்து அநுக்ரஹித்த விஷயத்தில் ஸபை யோர்களிடம் க்ருதஜ்ஞதையை ப்ரகாஶிப்பிக்கிறோம். கண்ணன் திருவாய்ப்பாடியைத் தனக்கு வாஸஸ்தாநமாகத் திருவுள்ளம்பற்றியவுடன் அவ்விடம் 'தத்ரஸ்தா.தி ரமணீயேஷு விஹரந் காமஶ்ருதி ஜிதந்தரீ । வ்ராஜவ்ரஜாம உச்சாவசாவ்ருதம் நவஶஷ்பம் ஸமந்ததஃ' 'ஹுவீகா ரவ்ருக்ஷவாஸிகஃ' என்றானாற்போலே இவ்விடத்திலும் வேறு பல நிர்ப்பந்தங்களால் அவரவர்களுக்கு தநவ்யயாதிகள் ஏற்பட்டிருந்தும் இந்த பாகவதாராதநத்தில் அஹமஹமிகையாய் ப்ரவ்ருத்தி ஏற்பட்டு, விஶேஷோபகாரம் பண்ணின இவ்விடத்திய ஸ்ரீக்ராமங்களிலுள்ள ஸ்வாமிக ளனைவருக்கும் அநந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பிக்கிறோம். இந்தப் பாக்யம்பெற ஜாயமாந கடாக்ஷம் போல ப்ரதமாநுக்ராஹகர்களும், 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை' யின் கார்யதர்ஶிகளுமான ஸ்ரீ உ௳. வாஸுதேவாசார்யர் ஸ்வாமிக்கும், ஸ்ரீ. உ௳. கோதண்டராமய்யங்கார் ஸ்வாமிக்கும் விசேஷமாய் நன்றியறிவு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"ஸஞ்ஜாயதே யேந ததஸ்ததோஷம் ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம் । ஸந்த்ருஶ்யதே வாப்யதிகம்யதே வா தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம்', 'வித்யாந்யா ஶில்பநைபுணம்' என்றும் கொண்டாடப்படுகிற தத்வஹித புருஷார்த்த விஷயக ஜ்ஞாந ப்ரகாஶத்தால், ஆந்தர பாஹ்ய தமோ நிரஸநங்களைப் பண்ணிக் கொண்டு விளங்கும் இம்மஹாஸங்கம் உத்தரோத்தரம் வ்ருத்தியடைய வேண்டுமென்று ஸ்ரீபூமி நீளாஸமேதனான ஸ்ரீஹரி ஶாப ஹாரிணீ ஸாந்நித்யம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ. வேதாந்ததேசிகதாஸஃ.

உபசாரண ஸபையின் அக்ராஸநாதிபதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:.

ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள பகவத் ஸ்தோத்ரங்கள். *

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥

ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய நாம் விசேஷமாய் பகவத் ஸ்தோத்ரங்களை ஆதரிக்கிறோம். நம் பால்யம் முதல் நமக்கு ஹயக்ரீவ ஸ்தோத்ரம் முதலான ஸ்துதிகளைப் பெரியவர்கள் அப்யஸித்து வைக்கிறார்கள். தத்காலத்தில் அவைகளின் அர்த்தாநுபவம் நமக்குக் கிடைக்காவிட்டாலும், அவைகளின் சப்த புஷ்டியும், ஶ்ராவ்யமான உச்சை: ஸ்வரத்துடன் உச்சரிப்பதும், ப்ராயேண பல பெயர் சேர்ந்து ஒரு வித காநத்துடன் கோஷிப்பதும், நமக்கும் கேட்பவர்களுக்கும் பரமமான ஆஹ்லாதத்தை உண்டுபண்ணுகிறது. காநங்களில் ஸாமகாநம் ஶ்லாக்யமென்பது ப்ரஸித்தம். ஸாமகாநத்தினால் ராவணன் ஈஶ்வரனை வஶ்யம் செய்ததாகச் சொல்வார்கள். வேதங்களின் மற்றைப் பாகங்களான ருக் யஜுர் வேதங்களை ஸ்வரத்துடன் உச்சரிப்பதும், தேவயாத்ரைகளிலும் ப்ராஹ்மண ஸமாஜங்களிலும் வேதபாராயணங்கள் செய்வதும் அர்த்தஜ்ஞாநம் சிறிதேனும் இல்லாமலே, நாம் அத்யந்தம் ஆநந்தத்தை அடைந்துவர ஹேதுவாயிருப்பது எல்லோருக்கும் அநுபவஸித்தம்.

[* இது, சென்ற மார்கழி மாஸத்தில் திருக்கண்டியூரில் நடைபெற்ற மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.]

இதற்குப் பிறகு, ஸ்தோத்ரகாநமும் பாசுரங்களின் காநமும் இதே மாதிரியாய் ஆநந்தத்தை விளைவிக்கின்றன. தமிழ்ப் பாசுரங்களை, இப்போது உச்சரிப்பதுபோல், ஓர்வித ஸாங்கேதிகமான ஏகஸ்ருதியாய் உச்சரிப்பது அவ்வளவு ஶ்ராவ்யமாய்த் தோன்றவில்லை. ப்ராசீந ஸ்தலங்களில் அரையர்கள் ஸாம்ப்ரதாயிகமாய் காநம் செய்யும் ஆழ்வார் பாசுரங்கள் மிகவும் ஶ்ராவ்யமாய் இருக்கின்றன. காநத்தின் மாதுர்யம் ப்ராயேண காநதர்மத்தின் ஸ்வபாவமானாலும், அது மேயமான வஸ்துவின் அர்த்த ஸ்வபாவத்தையும் பொறுத்திருக்கிறது. அர்த்தஜ்ஞாநம், இதர விஷயங்களிற்போல் காநத்திலும் ஆநந்தவ்ருத்திக்கு ஹேதுவாகிறது. ஆகையால் ஸ்தோத்ர காநமும் நமக்கு விசேஷமாய் ஆநந்தாவஹமாய் இருப்பது ஆஶ்சர்யகரமில்லை.

ஸ்தோத்ரம் என்னும் சப்தத்துக்கு 'குணிநிஷ்ட குணாபிதாநம்' என்று நிர்வசநம் செய்திருக்கிறார்கள். அதாவது: தத்யமான ஒரு குணம் ஒரு வஸ்துவினிடத்தில் இருக்குமானால், அதை எடுத்துச் சொல்வதே ஸ்துதியென்றாகிறது. இதனால் ஒருவரிடத்தில் இல்லாத குணத்தை இருப்பதுபோல் சொல்வது ஸ்தோத்ரமாகாது. தரித்ரனைக் கோடீஶ்வரன் என்றும், மூடனை ப்ருஹஸ்பதியென்றும் சொல்வது ஸ்தோத்ராபாஸமேயொழிய ஸ்தோத்ரங்களல்ல. இந்தத் தத்வத்தை 'நாஸதா ஹ்யுக்தி ருசமவஹதே' என்று ப்ராசீநரான த்ரமிடபாஷ்யகாரரும், 'கஸ்ஸதா குணேந கதிதேந நாதிஶயவதி' என்று நடாதூர் அம்மாள் என்கிற வாதாசார்யரும் அப்யுபகமம் செய்திருக்கிறார்கள். 'ஹோதாரம் த்வாமஶ்ருணி தேவி கவயோ யோவிஶ்வாணிமிதகுணாநு ஹோதவ்யஸ்ய' என்றார் பட்டரும். லௌகிகத்தில், இல்லாத குணத்தை இருப்பதுபோல் குணாரோபம் செய்வது ஸ்தோத்ரம் என்று எண்ணிவருவது உசிதமல்ல. இதனால் 'ஸூதாயே

कृतको स्तुतिः' என்கிற வாக்யமும், 'हृताधिकव्याहृति सा हि न स्तुतिः परमेष्ठिनः' என்கிற காளிதாஸ வாக்யமும், லோகத்ருஷ்டியை அநுஸரித்தவைகளென்றே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் நிர்வஹித்திருக்கிறார். இந்தத் தத்ய வசநரூபமான ஸ்தோத்ரத்தைப் பகவத்விஷயத்தில் செய்யும்போது அதை 'वाग्यज्ञं' என்றும் 'हविर्वीर्यकरं' என்றும் சொல்லி இருக்கிறார்கள். 'वाग्यज्ञेनार्चितो देवः प्रीयतां मे जनार्दनः' 'सर्ववेदमयज्ञानां सर्वयज्ञाधिकं तपोऽन्तकः । यज्ञस्त्वा पुण्डरीकाक्षं स्तोत्रैः परमहंसया' 'स्तोत्रेण यया स्तौति यज्ञं यज्ञेश्वरम्मया । सर्वं देवं विश्व कर्तारं को न स्तोत्र्येत संयतः' ॥ என்னும் வசநங்களினால் பகவான் விஷயத்தில் செய்யும் ஸ்தோத்ரங்களெல்லாம் பரமார்த்த ஸ்துதிகளென்றும் அவைகள் முக்திப்ரதங்களென்றும் ஸித்தமாகின்றன.

ஆர்யர்களான நாம் புராதநமாய் ஸ்தோத்ரங்கள் செய்வதிலேயே நிஷ்ணாதர்களென்பது, ஶ்ருதிகளில் ப்ராயேண ஸம்ஹிதைகள் ஸ்தோத்ரரூபமாயிருப்பதினாலே வ்யக்தமாகிறது. நம்முடைய ஶ்ரௌத ஸ்மார்த்த க்ரியைகளுக்கு ஆதாரமாயும், நாம் வேதவித் என்று சொல்வதற்கு ஆலம்பநமாயுமிருக்கும் ரிக் ஸம்ஹிதைகள் முழுவதும் ஸூக்தரூபமான கானங்களாகவே இருக்கின்றன. இது, 'अग्निमीळे पुरोहितं' என்கிற ஆரம்ப ரிக்கினாலேயே ஸ்பஷ்டம். இவைகளின் அர்த்தங்களை விமர்சித்தால் அவை இந்த்ராதி தேவதைகளின் அபதாநங்களை விஸ்தரித்துப் பௌருஷத்தை அலக்ஷ்யஞ் செய்து வர்ணிப்பதே அவைகளின் க்ருத்யமென்று தோன்றுகிறது. இப்படி ஸ்தோத்ரம்செய்வதின் ப்ரயோஜநம் ஶ்ரௌதமாகவே இருப்பதால், நாம், அநாதியான வேதத்துக்கு ப்ரயோஜந விசாரம் செய்வது ஸாஹஸமென்று பயப்படவேண்டியதில்லை. பின்தி, மீமாம்ஸகர்கள் அநுஷ்டேயார்

த்த ப்ரகாஶநம் மந்த்ரபாகத்தின் ப்ரயோஜநம் என்று ஶிக்ஷித்திருந்தபோதிலும், ஸாக்ஷாத்தாய் ரிக்குக்களும் அதன் ப்ரவக்தாக்களான ரிஷிகளும் தங்களுக்கு ஸ்துதியால் கிடைக்கவேண்டிய பலங்களை நிர்த்தேசித்திருக்கிறபடியால் அந்த த்ருஷ்ட பலங்களை நாம் உபேக்ஷிக்க வேண்டியதில்லை.

1. ஸேமம் ந: காமமா ப்ருண கோபிரஶ்வை: ஶதக்ரதோ ॥ ஸ்தவாம த்வா ஸ்வாத்யः ॥ I. 16. 9.

2. இந்த்ராவருண வாமஹம், ஹுவெ சித்ராய ராதஸெ। அஸ்மாந்த்ஸு ஜிக்யுஷஸ்க்ருதம் ॥ I. 17 - 7.

3. ஸ்தோத்ரம் ராதாநாம் பதெ கிர்வாஹொ வீர யஸ்ய தெ । விபூதிரஸ்து ஸூந்ருதா ॥ I. 30 - 5.

4. ததிக்ராவ்ணொ அகாரிஷம் ஜிஷ்ணொரஶ்வஸ்ய வாஜிந: । ஸுரபி நொ முகா கரத்ப்ரண ஆயூம்ஷி தாரிஷத் ॥ IV. 39 - 6.

5. க உ ஶ்ரவத் கதமொ யஜ்ஞியாநாம் வந்தாருதேவ: கதமொ ஜுஷாதெ ॥ கஸ்யெமாம் தேவீம் அம்ருதேஷு ப்ரெஷ்டாம் ஹ்ருதி ஶ்ரேஷாம ஸுஷ்டுதிம் ஸுஹவ்யாம் ॥ IV. 43 - 1.

6. ப்ருஹஸ்பத இந்த்ர வர்ததம் ந: ஸசா ஸா வாம் ஸுமதிம் பூத்வஸ்மெ । அவிஷ்டம் தியொ ஜிக்ருதம் புரந்தீ: ஜஜஸ்தமர்யொ வநுஷாமராதீ: ॥ IV. 50 - 11.

இங்கே உதாஹரித்த ரிக்குக்களினால் ஸ்தோத்ரபலம் பஹுவிதமென்று தெரிகின்றது. கோக்கள் அஶ்வங்கள் அந்நம் ஐஶ்வர்யம் முதலியனவும், மதுரமான வாக்கும், தீர்க்காயுஸ்ஸும், யுத்தத்தில் ஜயமும், புத்தியின் கூர்மையும், இவை முதலான பஹு பலங்கள் ஸ்துதர்களான தேவதைகள் ப்ரஸந்நர்களாய்க் கொடுத்தார்கள்.

இந்த ஸ்தோத்ரங்களுக்குப் பலங்கள் நிஸ்சிதங்களாயிருந்ததால், நாம் ஒரு நல்ல வஸ்துவை வைத்துக்கொண்டு யாருக்கு வேண்டும் என்று கேட்பதுபோல், மேற்சொன்ன ஐந்தாவது மந்த்ரத்தில், 'எந்த தேவர்களுக்கு இந்த ஸ்தோத்ரம் கேட்கப் பிரியம்? யார் இதை அடையப் போகிறார்கள்? இந்த அம்ருதமயமான ஸ்துதியை யார் ஹ்ருதயத்தில் படும்படி சொல்வோம்!' என்று கூப்பிடுகிறார்கள். மேலும், அநேக ருக்குக்களால், ஸ்தோத்ரபலம் கவிகளுக்கு மாத்ர மல்லாமல், ஸ்துதர்களான தேவதைகளுக்கும் வீர்ய வ்ருத்தி கரமாய் ஆகிறதாகத் தெரிகிறது. யுத்தகாலங்களில் யுத்த ஸஹாயத்துக்குக் கூப்பிடப்படுகிற தேவதைகள் ஸோமபாநம் செய்து பலமடைந்து, பிறகு, மநுஷ்யர்களுக்கு உபகரிக்கிறார்களென்று அநேக ருக்குக்கள் சொல்லுகின்றன. 'தெவாநு ஹாவயதாநெந தெ தெவா ஹாவயஂதீநஃ। வாஸுஂ ஹாவயஂதஃ ஶ்ரெயஃ வாஜ வாஷ்யய' என்கிற தத்வம் ஸ்ருதிகளில் ஸ்பஷ்டமாய் அநுபவிக்கப்படுகிறது.

"அயஂ யஜ்ஞோ தெவயா அயஂ மியெயஃ
இஜா ப்ருஹாணி அயமிஂத்ர வொஜஃ।
ஹிணஂபெஹிர் ஶாதஂஸகு வ்ரயாஹி
விபா, நிஷத்ய விமுவா ஹரீ இஹ॥

I. 177 - 4.

தா ஶஂஸயஂதீ ஜஹ்வஸ்ய வஸ்ஂஸ்ஂ
நிஜாசரா நயதி ரெதஸெ ஹுஜெ।
உயாதி வஂதோ அவஶஂ வஂவிதஂஃ
நாஜ த்ருதீயஂ அயி ரொவநெ திவஃ॥

I. 155 - 3.

இந்த ஜிக்குக்களில் ஸோமபாநம் தேவதைகளுக்கு வீர்யகரமானதுபோல், ஸ்துதிக்ளும் தேஜோவ்ருத்திகா மென்று ஏற்படுகிறது.

இப்படியே அர்வாசீநமான ஸ்தோத்ரங்களிலும் இந்த அபிப்ராயம் வெளிப்படுகிறது. ஸ்ரீராமாயணத்தில், வாநரர்கள் ஸாகர தாரணத்தை துஸ்ஸாத்யமாய் எண்ணி விஷண்ணர்களாய்,

" க இதாநீம் மஹாவேகோ லங்கயிஷ்யதி ஸாகரம் |
க: கரிஷ்யதி ஸுக்ரீவம் ஸத்யஸந்தமரிந்தமம் ||
கஸ்ய ப்ரஸாதாத் தாராம்ஶ்ச புத்ராம்ஶ்சைவ க்ருஹாணி ச ||
இதோ நிவ்ருத்தா: பஶ்யேம ஸித்தார்த்தா: ஸுகிநோ வயம் ||"

என்று ஆக்ரந்தம் செய்ய, மஹாப்ராஜ்ஞனான ஜாம்பவாந், 'ஏஷ ஸஞ்சோதயாம்யேநம் ய: கார்யம் ஸாதயிஷ்யதி' என்று சொல்லி, ஹநுமானைப் பார்த்து, அவர் ஜந்மம் முதல் உண்டான வ்ருத்தங்களை ஸ்மரிப்பித்து, 'ஸ த்வம் கேஸரிண: புத்ர: க்ஷேத்ரஜோ பீமவிக்ரம: | மாருதஸ்யௌரஸ: புத்ர: தேஜஸா சாபி தத்ஸம: ||' என்று ஸ்தோத்ரம் செய்து, 'உத்திஷ்ட ஹரிஶார்தூல லங்கயஸ்வ மஹார்ணவம் பரா ஹி ஸர்வபூதாநாம் ஹநுமந் யா கதிஸ்தவ | விக்ரமஸ்வ மஹாவேகோ விஷ்ணுஸ்த்ரீந் விக்ரமாநிவ ||' என்று ப்ரசோதநம் பண்ணினான்.

இந்த ஸ்துதியால் லப்தவீர்யனான ஹநுமானும் ஸமுத்ர தாரணத்தில் தன் ஶக்தியை ஒப்புக்கொண்டு, 'ஸம்ஸ்தூயமாநோ ஹநூமாந் வ்யவர்த்தத மஹாபல: | ஸமாவித்ய ச லாங்கூலம் ஹர்ஷாச்ச பலமேயிவாந் ||' என்கிறபடி அத்யுத்ஸாஹியாய்,

'உத்ஸஹேயமதிக்ராந்தும் ஸர்வாந் நக்ராலயாநஹம் |
ஸாகரம் ஶோஷயிஷ்யாமி தாரயிஷ்யாமி மேதிநீம் ||
வாஸவஸ்ய ஸவஜ்ரஸ்ய ப்ரஹ்மணோ வா ஸ்வயம்புவ: |
விக்ரம்ய ஸஹஸா ஹஸ்தாதம்ருதம் தத்திஹாநயே ||
லங்காம் வாபி ஸமுத்க்ஷிப்ய கச்சேயமிதி மே மதி: ||'

(கிஷ்கிந்தா : 67.)

என்று தன்ஸாமர்த்யத்தை உத்கோஷித்தார். வ்யதிரேகமாய், ஸ்ரீமஹாபாரதத்தில், கர்ணயுத்தத்தில், ஸ்தோத்ரத்தினால் வீர்ய வ்ருத்திபோல், நிந்தையால் தேஜோவத முண்டாகுமென்கிற தத்வத்தை மஹர்ஷி உதாஹரித்திருக்கிறார். ஸாக்ஷாத் வாஸுதேவனுக்கு ஸமானமாய் ஶல்யனை எண்ணி, கர்ணனுக்கு ஸாரத்யம்செய்ய அவரைத் துர்யோதனன் ப்ரார்த்தித்தபோது, 'ஸ யஸ்து ஹி ஸௌவீர க்ஷமிஷ்யே ச கத்தநம் வசஃ | உத்ஸ்ருஜேயம் யதாஶ்ரத்தமஹம் வாசோऽஸ்ய ஸம்நிதௌ ||' என்று கபடமாய் வரம் வாங்கிக்கொண்டு ஶல்யன் கர்ணனை யுத்தகாலத்தில் அதி கடோரமான சொற்களினால் கோபமூட்டி அவனுக்கு வீர்யஹாநியைச் செய்துவந்தான். 'வாஸுதேவ ஸஹஸ்ராணி பல்குநாநாம் ஶதாநி ச | அஹமேகோ ஹநிஷ்யாமி ஜோஷமாஸ்ஸ்வ குதேஶஜ ||' என்று கர்ணன் வீர்யம்பேச, ஶல்யனும், "யாவத்காண்டீவகோஷம் த்வம் ந ஶ்ருணோஷி மஹாஹவே | தாவதேவ த்வயா கர்ண ஶக்யம் வக்தும் யதேச்சஸி || யதாஸ்ருகாலஃ ஸிம்ஹஸ்ய யதா வ ஶஶகுஞ்ஜரௌ || யதாऽந்ருதம் ச ஸத்யம் ச யதா சாபி விஷாம்ருதே | ததா த்வமபி பார்த்தஶ்ச ப்ரக்யாதாவாத்மகர்மபிஃ" என்று அவனை நிந்தித்து, 'ஸமுத்ரதரணம் தோர்ப்யாம் கண்டே பத்த்வா யதா ஶிலாம் | கிர்யக்ராத்வா நிபதநம் தாத்ருக் தவ சிகீர்ஷிதம் ||' என்று ஹேளநம் பண்ணினான். இப்படியே ஸ்தோத்ரங்கள் யதார்த்தமானபோது தேவதைகளுக்கும் வீர்யவ்ருத்தி உண்டாயிற்று.

இனி, புராணங்களில், இந்த்ராதிகளுக்கு அபஜயம் வந்தகாலங்களில் தேவதைகளும் மஹர்ஷிகளும் அவனை ஶ்லாகித்ததும் இந்த அபிப்ராயத்தால் தான் என்று சொல்லவேண்டியதே. இந்த பங்கியை மஹாகவியான காளிதாஸனும் இந்த்ரனால் செய்யப்பட்ட மந்மத ப்ரோத்ஸாஹநத்தில் அநுவர்த்தித்திருக்கிறான். தனக்கு ஒரு கார்யம் ஆகவேண்டிய ஸமயத்தில் இந்த்ரன் தனக்குப் ப்ரேஷ்யனான மந்மதனைக்குறித்து, 'ஸ்மரேதி ஸாரக்ஞஃ வஸு

க்வா காம்யம் மநோரணாநாம் ஸம்நிபோக்ஷ்ய | வ்யாக்ஷிப்தே ஷ்யாமா கேஷ்ஷ்ய க்ருஷ்ண நக்ஷ்ஷ்ஹாப ஸ்நாயமேஷ: ||'' என்றும், ''ஸம்ஸாஸ்ஸ்யமுயிதாஷவேத காயமுதுயா ணா கவிஷ்வாநாம் | வாமேந கலமும் நவாதிஹிம்ஸ்யம் கேஹாவ தாஷி ஸ் யஹணியவீர்யம்:'' என்றும் அவன் வைபவங் களை எடுத்து ப்ரகாசிப்பித்து மந்மதனைத் தன் கார்யத்துக்கு ப்ரவ ணனுக்கினுன். இப்படியே குமாரஸம்பவம் 7-வது ஸர்க்கத்தில், விவாஹோத்யுக்தரான ஹரனை ப்ருஹ்மாவும் விஷ்ணுவும் பார்த்த தாகச் சொல்லுமிடத்தில், காளிதாஸன், 'தமேம்ய வக்ஷ ஹ்ருயமிமா விபாஷா ஸ்ரீவத்ஸலக்ஷ்மா வபுஷஷுவ்ரஸாக்ஷாக | ஜயேதிவாவா கஹிமாநலஸ்ய ஸம்வயபம்சஸ ஹவிஷவ வஹ்நி: ||' என்கிற ஸ்லோகத்தால் ஜயஸப்தோச்சாரணம், மஹிமவ்ருத்தி காரணமென்று ஸூசிப்பித்தான்.

பகவத்பரமான ஸ்தோத்ரங்களே நமக்கு முக்ய விஷயமா கையால், இனி அவைகளின் ஸைலியைச் சிந்திப்போம். பகவான் விஷயத்தில் குணகதநம் பகவானுக்கு வீர்யவ்ருத்திகரமென்று சொல்ல ஒளசித்யமில்லை. ஆகிலும் அவருக்கு ப்ரீதிகரமென்றும் குணுநுஸந்தாநம் பக்தனுக்கு அத்யந்தம் ஹ்ருத்யமென்றும் அவ னுடைய பகவத் யோகத்துக்கு உபகாரகமென்று ஸ்புடமாய் ஏற்படுகிறது. இவ்வித ஸ்தோத்ரங்களில் பகவத்குணங்களில் பரத் வத்தை பரகாஸிப்பிக்கிற குணங்களைப் பிரித்துத் தனியாகவும் ஸௌலப்யாதி ப்ராப்யநுகுணங்களான ஸ்வபாவங்களைப் பிரித் தும் அநுபவிப்பது ஸஹஜம். மேலும் ப்ராப்தாவின் தோஷங் களையும் அவன் தான் செய்த நிக்ரஹ ஹேதுவான பாபங்கள் விஷயத்தில் அநுசயத்தையும் ப்ரகாசித்தும் ப்ரார்த்தநாந்தமாய் அநுஸந்திப்பது ஸம்ப்ரதாயமாய் இருக்கிறது. இந்த அம்சங்களை ஸ்ருதியில் ப்ரஸித்தமான விஷ்ணு ஸூக்தங்களில் நாம் காண்கி ரோம்:—

''விஷ்ணோர்நுகம் வீர்யாணி ப்ரவோசம்
யஃ பார்திவாநி விமமே ரஜாம்ஸி |

யோ அஸ்கபாயத் உத்தரம் ஸதஸ்தம்
விசக்ரமாணஸ் த்ரேதோருகாய: ॥"

I. 154-1.

"யஸ்ய த்ரீ பூர்ணா மதுநா பதாநி
அக்ஷீயமாணா ஸ்வதயா மதந்தி ।
ய உ த்ரிதாது ப்ருதிவீம் உத த்யாம்
ஏகோ தாதார புவநாநி விஶ்வா ॥"

1 - 154 - 4.

இந்த ருக்குகளில் த்ரிவிக்ரமாவதாரத்தின் க்ரமத்தையும் பாத்வ ப்ரகாசகமான புவநத்ரயாதாரத்வத்தையும் போக்யதமமான திருவடிகளின் மாதுர்யத்தையும் சொல்லி, பின்,

"தத் அஸ்ய ப்ரியம் அபி பாதோ அஶ்யாம்
நரோ யத்ர தேவயவோ மதந்தி ।
உருக்ரமஸ்ய ஸ ஹி பந்துர் இத்தா
விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: ॥"

I. 154 - 5.

என்கிற ருக்கில் பரமபதம் ப்ராப்யம் என்றும், நித்யஸூரிகள் வாஸஸ்தாநம் என்றும் பலத்தை நிர்த்தேசித்து, பகவத்ப்ராப்தியடையக்கூடியவனையே பகவானுக்குப் பந்து வென்று, மேல் உபநிஷத்து காட்டுகிற 'யத்ர தேவேஷு ப்ருணாதிதேந மஹ்ய:' என்கிற அர்த்தத்தை ஸூசிப்பித்து, 'விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:' என்பதினால் அந்தப் பரமபதத்தின் நிரதிசய மதுப்ரவாஹ ரூபமான ஆநந்த ஸ்வரூபத்தைத் தெரிவிக்கிறது.

இந்த ப்ரகரணத்தில் மூன்றாவது வைஷ்ணவ மந்த்ரத்தில் இன்னும் சில பாத்வ ஸௌலப்ய விஷயமான குணங்கள் ப்ரதிபாதிக்கப்பட்டு, யஜ்ஞாதி கர்மங்கள் அவா ஆராதநங்களென்றும் அவருடன் ஸாயுஜ்ய ப்ராப்தங்களென்றும் இப்படிப்பட்ட அர்த்தங்கள் கிடைக்கின்றன.

“ 𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌯 𑌵𑍇𑌧𑌸𑍇 𑌨𑌵𑍀𑌯𑌸𑍇
𑌸𑍁𑌮𑌜𑍍𑌜𑌾𑌨𑌯𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌦𑌦𑌾𑌶𑌤𑌿 ।
𑌯𑍋 𑌜𑌾𑌤𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋 𑌮𑌹𑌿 𑌬𑍍𑌰𑌵𑌤𑍍
𑌸𑍇𑌦𑍁 𑌶𑍍𑌰𑌵𑍋𑌭𑌿𑌃 𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌚𑌿𑌦𑌭𑍍𑌯𑌸𑌤𑍍 ”

1. 156 - 2.

“ 𑌤𑌮𑍁 𑌸𑍍𑌤𑍋𑌤𑌾𑌰𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾𑌵𑌿𑌦
𑌋𑌤𑌸𑍍𑌯 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌜𑌨𑍁𑌷𑌾 𑌪𑌿𑌪𑌰𑍍𑌤𑌨 ।
𑌆𑌸𑍍𑌯 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌮 𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌵𑌕𑍍𑌤𑌨
𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋 𑌸𑍁𑌮𑌤𑌿𑌂 𑌭𑌜𑌾𑌮𑌹𑍇 ॥ ”

1- 156 - 3.

“ 𑌅𑌧𑌾 𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋 𑌵𑌿𑌦𑍁𑌷𑌾 𑌚𑌿𑌦𑌰𑍍𑌧𑍍𑌯𑌃
𑌸𑍍𑌤𑍋𑌮𑍋 𑌯𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌰𑌾𑌧𑍍𑌯𑍋 𑌹𑌵𑌿𑌷𑍍𑌮𑌤𑌾 । ”

1. 156 - (1)

𑌵𑍇𑌧𑌾 𑌅𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌷𑌧𑌸𑍍𑌥 𑌆𑌰𑍍𑌯𑌮𑍍
𑌋𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌗𑍇 𑌯𑌜𑌮𑌾𑌨𑌮𑌾𑌭𑌜𑌤𑍍 ॥

1. 156 - 5.

இந்த ஸ்ரௌதமான பகவத் ஸ்தோத்ரங்களில் சில விசேஷங்கள் காண்கிறோம். இந்த்ராதி விஷயமான இதர ருக்குகளில் போல் இங்கே பசுபுத்ராதி ப்ரார்த்தனை இல்லை. அவர் (விஷ்ணு) பூர்வ்யர் - அநாதியா யிருப்பவர், நவீயஸ் - ‘ 𑌨𑌵𑍋 𑌨𑌵𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 ’ என்கிறபடி எப்போதும் நவமாய்க் காணப்படுபவர். அவர் இந்த்ரன், வருணன், மருத் முதலான தேவதைகளுக்கு உபகாரி. அவர் ‘ வேதஸ் ’, ஸ்ரஷ்டா ; த்ரிஜகத்திலும் இருப்பவர். ‘ 𑌅𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑍍 𑌆𑌰𑍍𑌯𑌮𑍍 ’ ஆர்யர்களுக்கு வ்ருத்தியைச் செய்பவர். தன் ஸாயுஜ்யத்தையும் ஸ்தாநத்தையும் கொடுப்பவர். அவருக்கு பக்தன் பந்து. அவர் அம்ருதமயமான பரமபதத்தை அளிப்பவர்.’ இந்த விதமாய் உபநிஷத்தில் ப்ரதிபாதிதங்களான அர்த்தங்கள் இந்த விஷ்ணு ஸூக்தங்களிலேயே காணப்படுகின்றன. இதே

அர்த்தங்கள் முதல் மண்டலத்தில் 22 - வது ஸூக்தத்தில் கடைசியான 6-ருக்குக்களிலும் சொல்லப்படுகின்றன. இந்த ருக்குக்கள் ‘இதம் விஷ்ணுர் விசக்ரமே’ என்பது முதலாக ப்ரஸித்தங்கள். இங்கேயும் ‘அதோ தர்மாணி தாரயன்’ என்றும் ‘இந்த்ரஸ்ய யுஜ்ய: ஸகா’ என்றும் அவருடைய அவதார ப்ரயோஜநங்கள் சொல்லப்படுகின்றன.

“ தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: ।
திவீவ சக்ஷுராததம் (20)

தத் விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸ: ஸமிந்ததே ।
விஷ்ணோர்யத் பரமம் பதம் ॥ ” (21)

இங்கே ‘விபந்யவோ ஜாக்ருவாம்ஸ:’ என்பதால் ஸதா ஸ்தோத்ரம் செய்து பரமபதத்தில் ஸஹவாஸம் செய்யும் நித்யஸூரிகள் சொல்லப்படுகிறார்கள். பஹுவாய் இதர தேவதைகளைக் கூப்பிட்ட பிறகு கடைசியாக விஷ்ணுவை ஆஹ்வாநம் செய்து அவர் ஸ்தாநமாகிய பரமபதத்தை நிர்த்தேசித்திருப்பதும் விஷ்ணு பாரம்யத்தை வ்யக்தமாய்க் காட்டுகிறது.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் எழாவது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த மஹா ஸங்கம், திருக்கண்டியூர்.

அடியேன் ஆட்கொண்டவல்லி - கோவிந்தாசார்யன் அநேக தண்டன் ஸமர்ப்பித்துச் செய்யும் விஜ்ஞாபநம்:—

இந்த மஹாஸபையில் அடியேனுக்கு, ‘அவஸ்தா ப்ரஸ்தாவேஷு’ என்கிறபடியே பொருளல்லாத அடியேனைப் பொருட்டுத்துவதற்காக, ஓர் அக்ராஸநத்தைத் தந்ததின்பொருட்டு என்றும் மிகுந்த நன்றி யறிவுபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அடியேன், ஒருக்கால் அவ்விடம் வராமலிருக்கும் பக்ஷத்தில், ப்ரத்யக்ஷ ஸ்தாநத்தில் இந்த பத்ரத்தை வைத்துக்கொண்டு ஸதஸ்ஸை நிர்வஹிக்கவேணுமென்று புந: புந: ப்ரணாம புரஸ்ஸரமாய்ப் ப்ரார்த்திக்கிறேன். ஸங்கத்தின் நோக்கங்கள் பின் வருமாறு இருத்தல் வேண்டும்:—

1. ப்ரிடிஷ் ராஜ்யத்துக்கு ஜயம்கோருகை.

2. ஸெக்ரிடெரி ஆப் ஸடேட் மாண்டேக் அவர்கட்கு நல்வரவு கூறுதல்.

3. மதராஸ் நகரில், அவரிடத்தில் வந்துள்ள அட்ரெஸ்ஸுகள் பலவற்றுள், ப்ராஹமண ஸமுதாயத்துக்காக ஏற்பட்ட வர்ணாஶ்ரம தர்ம ஸபை முதலிய சில ஸபைகளை அங்கீகரிக்காமல் தவிர்ந்ததினால், இந்தியர்களின் வாஸ்தவமான அபிப்ராயங்கள் இன்னவை என்று கண்டுகொள்ளாத குறைவு ஏற்பட்டுவிடும். ஆகையால், இவர்கள் அபிப்ராயம் தெரிந்துகொள்ளாமல், எவ்விதமான ராஜ்யபார க்ரமங்கள் செய்தபோதிலும் ஸமாபகமாகாதென்பதை இந்த ஸபையார் ஸெக்ரிடெரி ஆப் ஸ்டேட் வைஸ்ராய் இவர்கட்குத் தெரியப்படுத்துகிறார்கள்.

4. இந்த ப்ராஹ்மண வர்க்கத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள், தங்களுக்கு ஏற்பட்ட அஸாதாரணமான ஸமயாசார நிஷ்கர்ஷங்கள் முதலியவற்றைப்பற்றி லெஜிஸ்லெடிவ் முதலிய ஸபைகளில் பேச இடம் கொடுக்கவேணும். கோவில்கள், தீர்த்தங்கள், மடங்கள், க்ஷேத்ரங்கள், வர்ணாஶ்ரம தர்ம வ்யவஸ்தைகள் முதலியன் இம்மாதிரி ப்ரதிநித்யம் நடக்கவேணும். இந்த விவரம் ஸபையார் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

5. வைஸ்ராய் - ஸெக்ரிடெரி ஆப்ஸ்டேட் அவர்கட்கு முக்யமாய்த் தெரிவிக்கவேண்டிய அம்ஶம் ஒன்று. ப்ராஹ்மணேதர ஹிந்து ஸங்கத்தாரும், ஐரோப்ய ஸங்கத்தினரும், ஆங்க்லோ-இந்தியன் கூட்டத்தவரும், நேடிவ் க்ரிஸ்டியன் வகைராக்களும், ப்ராஹ்மணர்க்கு விஷயமாகாத தோஷங்களை ஆரோபித்துத் தங்கள் தங்கள் அட்ரெஸ்ஸில் காண்பித்திருப்பது தத்யமன்று அஸூயையால் ஸ்வார்த்த பரத்வ பரஶ்ரேயோஸஹிஷ்ணுத்வங்களைக் காட்டுவது தவிர, தேஶத்தில் பிந்நபுத்தியைப் பரவச்செய்து, ஐகமத்யத்தைப் போக்கி, ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவுக்குக் கொடுக்கலாமென்று ஸங்கல்பிக்கும் ஸ்வாரராஜ்யத்துக்குக் (Responsible Self-Government) குந்தகம் உண்டாக்கி, ப்ரிடிஷ் ஆதிபத்யத்துக்கே கேடு கோருகிறார்கள் என்னும் அபிப்ராயத்தை வ்யக்தமாகக் காட்டவேணும். இது ஒரு ஸங்கல்பம் (Resolution) ஆகவேணும்.

6. அநாதியாக ஏற்பட்டிருக்கும் நம் பஞ்சமஜாதி ப்ராத்ரு வர்க்கத்துக்கு ஸ்ரீ ராமாநுஜ ப்ரப்ருதிகள் எவ்வளவோ பாடுபட்டிருக்க, இவற்றையெல்லாம் மறைத்து, அவர்களுக்கும் ப்ருஹ்மத்வேஷம் ப்ராஹ்மணேதரம் என்னும் பேதபுத்தியை உண்டாக்குகின்றனர். நம் பஞ்சமர்களுடைய ஆதிசரித்ரத்தையும், அவர்களுக்கும் ராமாநுஜீயர்களுக்கும் உண்டாயிருக்கும் த்ராவிடத்வத்தையும் மறைத்துவருகிறார்கள். இவ்விஷயம், சரித்ரங்கள் தெரியாத வ்யக்திகளுக்கு மோஹகமாயிருக்கையால், இந்த விவரங்களெல்லாம் மதராஸ் முதலான முக்ய பட்டணங்களில் நம் பஞ்சம த்ராவிடர்களும்

ஸ்ரீவைஷ்ணவ த்ராவிடர்களும் கூடி விசாரிக்க வேண்டியது அவஶ்யம். இது ஒரு ஸங்கல்பம். மற்றும் இது போன்ற கடைமைகளை ஆலோசிக்க வேண்டியது. இது லௌகிகத்துக்கு ஸம்பந்தப்பட்டதாகிலும், ‘ஈதென்ன உலகியற்கை’ ‘ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி’ என்னும் ந்யாயங்களினாலும் பாரமார்த்திக ஜ்ஞாநமுள்ளோர் உணர்தலும் ஈஶ்வரஸங்கல்பமே.

ஸபையினர் நியமித்திருக்கும் அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயங்கள் : ஈஶ்வரதத்வம், ஸ்ரீவிஶிஷ்டாத்வைத ஸித்தாந்த வைபவம், ஸ்பர்ஶ தோஷம் என்பன. அடியேன் வந்தால் உபந்யாஸங்களுக்கு உபஷ்டம்பகமாய் விண்ணப்பிக்க வேண்டியதற்கு ஸந்தர்ப்பங்கள் வாய்க்கும். அங்ஙனம் வராவிடில், அந்த உபந்யாஸங்களை அடியேன் பட்டோலையில் சாத்தினதைச் சேவித்து, அடியேனுடைய அபிப்ராயத்துடன் ஸ்ரீவேதாந்ததீபிகையில் ப்ரசுரம் செய்ய அபேக்ஷிப்பேன்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்துக்கு உள்ளடங்கிய விசாரங்கள் ஆமுஷ்மிகத்துக்கு எவ்வளவு ஒத்தாசை என்னும் விஷயத்தில் உலகுக்குப்ரத்யயம் உண்டாக்குதல்.

இதற்கு முக்யமான அங்கம் ஸ்ரீவேதாந்ததீபிகை. இது விஸ்தரிப்பதற்குத் தகுந்த ப்ரயத்நம் செய்தல்.

திவ்யதேசங்களில் ஒற்றுமையை யுண்டாக்குவதற்காக ஸந்நிதிகள் தோறும் ஸ்ரீதேசிகனையும் ஸ்ரீமணவாளமாமுநிகளையும் எழுந்தருளப்பண்ணுதல்.

ஸ்ரீவைஷ்ணவ ஸங்கங்களைக் குறித்து நம் மடாதிபதிகளின் ஔதாஸீந்யத்தை விசாரிப்பது தவிர அவர்கட்கு விண்ணப்பித்துக் கொள்கை.

மடங்கள், ஸந்நிதிகள் இவைகளின் வருமானத்தைக் கொண்டு வைதிக வித்யையை அபிவ்ருத்திசெய்தல்.

ப்ராஹ்மணேதரர்களுக்குக் காலமகிமைக்குத் தக்க உபபத்திகள் ஏற்படுத்திக் கொடுக்கும் வகை எப்படி ?

அடியேன் அவ்விடம் வரத் தவறினால் ‘[illegible]’ எனும் வண்ணம் தேவரீர்களை ஸேவித்து க்ருதார்த்தமாகும் பாக்யம் அடையவில்லையே யென்று பரிதபித்து அவ்விடத்தில் நடக்கும் வர்த்தமாநங்களைக் கேட்க மிக்க ஆவலுடையவனாயிருப்பேன்.

ஸர்வாபராதங்களையும் க்ஷமித்தருளவேணும்.

வேதக்ருஹம், மைஸூர்,
21—12—17.

ஆ. கோவிந்த தாஸ:.

ஸ்ரீ:

கடிதங்கள்.

குருபரம்பராநுஸந்தாந க்ரம நிரூபணம்.

(1)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ராயம்பேட்டை ஸ்வாமி கார்த்திகை மாஸத்திய ஸஞ்சிகையில் (65-ம் பக்கத்தில்) 'ஸ்ரீ தேசிகன் குருப்ரம்பராஸார க்ரந்தத்தில்...........அநுஸந்திக்க வேணுமென்று ஓதப்பட்டது' என்று அநுஸந்தாந ப்ரகரணத்தை முடித்துவிட்டு, குருபரம்பரா ப்ரகாஶநார்த்தமாகவும், நம் ஸித்தாந்தம் ஸத்ஸம்ப்ரதாய ஸமாஶ்ரிதமென்று காட்டுவதற்காகவும், 'ஈஶாவஸா' என்கிற ப்ரமாண ப்ராப்தமான தத்தத் வ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநார்த்தமாகவும் குருபரம்பரையை ஆரம்பிப்பதாக எழுதுகிறார்.

இதனாலும், ஷை ஸஞ்சிகையில் 66-ம் பக்கத்தில், ராயம்பேட்டை ஸ்வாமி, 'குருபரம்பரா ப்ரகாஶநார்த்த குருவ்யக்தி பரிஜ்ஞாநார்த்தம்' என்பதனாலும், அநுஸந்தாநம் பூர்வமென்றும் அதன் பலமான ப்ரகாஶநம் உத்தரகாலிகமென்பதும் ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளமென்று தெரிகிறது.

இவர் அநுஸந்தாநத்தை முடித்துவிட்டு ப்ரகாஶநத்தை ஆரம்பிப்பதாக எழுதினது அநுசிதம். இங்கு, ப்ராசீந வ்யாக்யாநமான ஸார தீபிகையில், ('ஸவா......ஹுமவத்' என்று ஶ்ருதி) "அந்த ஆசார்ய பரம்பரைதான் ஏதென்ன, இவ்வாசார்யர்களித்பாதியாலே அத்தை அருளிச் செய்வாராக முக்தரவத்தின் மாஹாத்ம்யத்தை அருளிச் செய்கிறார். தத்ஜ மென்று தொடங்கி மஹர்ஷி அருளிச் செய்தான் என்னுமளவாக என்கிற வாக்யத்தினால் 'ஸவாவாய வம்ஶ:' என்று ஓதப்பட்ட ஆசார்ய வம்சத்தையே இவ்வாசார்யர்களில் ஈஶ்வரமுநிகள் பிள்ளை நாதமுநிகள்" என்று அருளிச்செய்வதாக ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸாதிக்கிறபடியினால், அவரோஹண க்ரமத்தையும் இந்த ஶ்ருதியே சொல்லுகிறதென்பது வாக்யஜ்ஞர்களுக்கு ஸித்தமாகிறதுடன் குருபரம்பராஸார க்ரந்தம் முழுவதும் ப்ரகாஶந பலமான அநுஸந்தாநத்தையே ப்ரதிபாதிக்கிறதே யொழிய, அடியில் ஶிஷ்யனை உத்தேசித்து அநுஸந்தாநத்தையும், நடுவில் ஆசார்யனை உத்தேசித்து ப்ரகாஶநத்தையும், முடிவில் ஶிஷ்யனுக்கு அநுஸந்தாநத்தையும் ப்ரதிபாதநம் செய்வதாகச் சொல்வது ஸ்ரீ தேசிக ஸூக்திக்கு அழகாக இருக்கமாட்டாது.

தவிரவும், ராயம்பேட்டை ஸ்வாமி, 'பரம்பரா ப்ரகாஶநார்த்தம் ஸஹாவஹா விதிவ்யாக்யாநம் வ்யாக்யாத்ருவ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநார்த்தமாகவும்' என்று எழுதியிருக்கிறார். இவர் குருபரம்பரா ப்ரகாஶந விஷயத்தில் வ்யக்தி விஶேஷ ஜ்ஞாநத்துக்கு 'ஸஹாவஹாவிதி' வாக்யம் ப்ரமாணமென்று சொல்வதால், இவ்வாக்யம், 'ஸ்வாத்யாயோத்யேதவ்ய' என்று விதிக்கப்பட்ட அர்த்தத்தில் அந்தந்த வ்யக்தி விஶேஷ விஷயதையை விதிக்கிறபடியால், 'ஸவ......ஜுஷ:' என்கிற ஶ்ருதியில் குருபரம்பரா ப்ரகாஶநம் அவரோஹண க்ரமமாக விவக்ஷிதமென்று தேசிகாபிப்ராயமாகத் தாமே ஸ்வதந்த்ரா அவஶ்யம் ஒப்புக்கொண்டார் என்பதை ப்ராமாணிகர்கள் கவனிக்கவேணும். 'ஜுஷ:' என்பதனால் ப்ரகாஶநம் விவக்ஷிக்கப்பட்டாலொழிய, இதற்கு ஶேஷமான 'ஸஹாவஹாவிதி' வாக்யம் இதை அநுவதித்து அந்தந்த வ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநத்தை விதிக்காதிறே. ஆனால், ஸஹாவஹாவிதி ப்ரமாண ப்ராப்தமான தத்தத் வ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநார்த்தமென்று எழுதப்பட்டிருப்பதால், இந்த ஶ்ருதி வ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநத்தில் ப்ரமாணமாக எழுதப்பட்டதே யொழிய, ப்ரகாஶநத்தில் ப்ரமாணமாக எழுதப்படவில்லையென்று சொல்லலாம். இது அத்யந்தாநுசிதம். ஏனெனில்: இவர் குருபரம்பராஸார க்ரந்தத்தை அநேக பாகமாகப் பிரித்து, முதலில் அநுஸந்தாநத்தை ஸ்ரீ தேசிகன் முடித்துவிட்டதாகவும், ப்ரகாஶநார்த்தமாக ப்ரகரணத்தை ஸ்ரீ தேசிகன் ஆரம்பிப்பதாக எழுதியிருக்குமிடத்தில் வ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநத்துக்கு 'ஸஹாவஹாவிதி' ஶ்ருதி ப்ரமாணமென்று சொல்வதால், பூர்வ வாக்ய ப்ராப்தார்த்தத்துக்கு ஆகார விஶேஷத்தைப் போதிப்பிக்கிற இவ்வாக்யம் தச்சேஷபூதமாகையால் பூர்வ வாக்ய ப்ரதிபந்நார்த்தத்தை நிஶ்சயிக்குமிடத்தில் 'ஜுஷ:' என்று ப்ரகாஶநம் சொல்லப்படுகிறதென்பது இந்த ஸ்வாமிக்கு அபிமதமானால், அதற்கு ஶேஷமான 'ஸஹாவஹா' என்கிற வாக்யம் ப்ரகாஶந விஷயத்தில் வ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநத்தை எப்படி விதிக்குமென்பதைப் பராமர்ஶிக்கவேணும்.

ப்ரகாஶந விஷயத்தில் தத்தத் வ்யக்தி விஶேஷ ஜ்ஞாநத்தை விதிக்கும் ஶ்ருதி வேறு இல்லையாகையினாலும், முண்டகாதி வாக்யங்களைக்கொண்டு விதி வாக்யத்தைக் கல்பிப்பதைக் காட்டிலும், இந்த ஸ்வாமி இந்த விபாகத்தைக் கல்பிக்காமல், 'ஸ்வாத்யாயோத்யேதவ்ய' என்கிற ஶ்ருதியே ப்ரகாஶந பர்யந்தமான பக்தி விஶிஷ்டாநுஸந்தாநத்தை விதிக்கிறதென்று சொல்வது ஸாரதீபிகை முதலான வ்யாக்யாநங்களுக்கு அநுகுணமாயிருப்பதோடு அநாதிஸித்தமான ஸதநுஷ்டாநத்துக்கும் விரோதமில்லாதிருக்கும்.

ராயம்பேட்டை ஸ்வாமி, அவரோஹண க்ரமமாக ப்ரகாஶநம் முடிந்த பிறகு, மறுபடியும் அநுஸந்தாநத்தை விதிபல ப்ராப்தம் என்று அருளிச்

செய்வதாக எழுதியிருக்கிறார். இந்த ஸ்வாமி அபிப்ராயப்படி அநுஸந்தாநம் ஶிஷ்யக்ருத்யமாகையினால், இங்கு விதி சப்தத்துக்கு, '[illegible]' என்கிற வாக்யம் விவக்ஷிதமென்கிற ஸாரதீபிகா முதலான வ்யாக்யாநங்களில், ஆசார்யனுக்கு உபதேஶ காலத்தில் குருபரம்பராநுஸந்தாநத்தை விதிப்பதாக எழுதியிருப்பதால் இது எப்படி ஸங்கதமாகுமோ தெரியவில்லை.

இங்கு '[illegible]' என்று உபதேச காலத்தில் சொல்லுகிறபடியினால் ராயம்பேட்டை ஸ்வாமி அபிப்ராயப்படி உபதேசகாலத்தில் அவரோஹண க்ரமமாக ப்ரகாஶநத்தை இந்த '[illegible]' என்கிற பதம் எப்படி ஸ்வரஸமாகச் சொல்லுமோ தெரியவில்லை. இங்கு அநுஸந்தாந ப்ரகாஶநங்கள் அவிநாபூதங்களாகையினாலே இது கூடுமென்னில் ஶ்ருதியிலும் '[illegible]' என்கிற பதத்தில் இரண்டும் விவக்ஷிதமாகக் குறையில்லை. அநுஸந்தாநத்தின் பலம் ப்ரகாஶநம் என்கையினால், ப்ரகாஶந பர்யந்தமான அநுஸந்தாநம் விவக்ஷிதமென்பது ந்யாய்யமாகுமிறே.

இங்கு ஸ்ரீ தேசிகனுக்கு க்ரம விஶேஷ விவக்ஷையில் தாத்பர்யமில்லையாகையால்தான் இந்த அதிகாரத்தில் அவரோஹண க்ரமத்தையும், இதன் ஸங்க்ரஹ பாசுரத்தில் ஆரோஹண க்ரமத்தையும் அருளிச்செய்தார். ராயம்பேட்டை ஸ்வாமியின் அபிப்ராயப்படி இந்த ப்ரகரணம் அநுஸந்தாந மற்ற ப்ரகாஶந மாத்ரமாயிருந்தால் அவரோஹண க்ரமமாக ப்ரகாஶநமே இந்த அதிகாரத்தில் ப்ரதாநமாகச் சொல்லப்படுவதால் இந்தப் பாசுரம் அதிகாரார்த்த ஸங்க்ரஹமாகாது; அல்லது அவ்விதமாக ஒரு பாசுரம் அருளிச்செய்திருக்கலாம்.

ஸ்ரீ தேசிகனுக்கு '[illegible]' என்கிற ஶ்ருதியில் பகவானையும் குரு பங்க்தியில் சேர்த்து அவஶ்யம் அநுஸந்திக்கவேணும் என்கிற அபிப்ராயமேயொழிய க்ரம விஶேஷ தாத்பர்யமில்லை. பகவானை குரு பங்க்தியில் சேர்க்காமல், '[illegible]' என்கிற பதத்துக்கு மர்யாதார்த்தகத்வம் சொல்லக்கூடாதென்பதற்காகத்தான் 'செல்ல' என்று அருளிச் செய்தார்—என்பது ஆங்காங்கு ஸ்ரீ ஸூக்தி பராமர்ஶம் பண்ணுமவர்களுக்கு வித்தம். இதனால் '[illegible]' ஶப்தமும் வ்யாக்யாதமாய்த்து. இவ்வாசார்யர்களுக்கும் ஸ்ரஷ்டாவாய், ஜ்ஞாந ஶக்தி ப்ரதாநம் பண்ணி ஸர்வஜ்ஞனாய், நிஸ்ஸமாப்யதிகனான ஈஶ்வரனை ஆசார்யகோடியில் சேர்த்து அநுஸந்திக்கலாமாவென்னும் ஶங்கை ஜநிக்கலாமிறே. ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் த்யாநத்துக்குக் குருபரம்பரா ப்ரபத்தி பூர்வகத்வம் ஆவஶ்யகம் என்பதை அருளிச்செய்தாரேயொழிய க்ரமாந்தரத்தைத் தூஷித்தாரில்லை. இது அங்கு '[illegible]' என்று ஆரம்பிக்கிற ப்ரதிஜ்ஞா வாக்யத்தினால் நன்கு விளங்குகிறது. '[illegible]' என்று எடுத்த ஸம்வாத வாக்யத்தினும்

இதுவே த்ருடீக்ருதமாகிறது. ஆகையினுல் அங்குபர்யந்தமென்று அருளிச் செய்ததனுல் க்ரமாந்தரம் அநபிமதமென்று சொல்லமுடியாது. அர்வாசீந வ்யாக்யாதாக்களுக்கு அவரோஹண க்ரமம் மநஸ்ஸில் ஶ்ரமத்தை உண்டு பண்ணினதுபோல, ஸ்ரீ தேசிகனுக்கும் இது அநபிமதமாக இருந்தால் இதை ஸதத்வாக தூஷிக்காமல் விடக் காரணமில்லை. சவ சஷிஜ கநசிதம் ஹவதீதி ந்யாயேந இதுவும் ஸ்ரீ தேசிகாபிமதமென்று சொல்லத் தடையில்லை.

சில வ்யாக்யாநங்களில் ப்ரௌடிவாதம் உண்டென்பதை 'புருடன் மணிவரமாக' என்கிற பாசுரத்தில், 'ஆங்காரங்கள் சார்ங்கம் சங்காக' என்கிற பதங்கட்கு ஸாத்விகாஹங்காரம் ஶங்கமென்றும், தாமஸம் சார்ங்கமென்றும் ஸாராஸ்வாதிநியிலும் அருளிச்செய்தது, ஸ்ரீ தேசிகன் ஷோடஶாயுத ஸ்தோத்ரத்தில், 'ஶங்கம் ஸாத்விக ஸம்ஜ்ஞகாராஸம் ஶார்ங்கம் ச தாமஸம் ... ' என்று அருளிச்செய்ததற்கு விருத்தமென்பதை ராயம்பேட்டை ஸ்வாமியே தீபிகையில் அச்சிட்டு ப்ரஸித்திப்படுத்தியிருப்பதால் சில வ்யாக்யாந விரோதங்களினுல் ப்ராமாணிகார்த்ததைச் சலிப்பிக்க முடியாது. இன்னும் சில ஆக்ரஹ தோஷாலங்க்ருதமான அநுநாதந ஸ்ரீ ஸூக்திகள் நிஶ்சித ப்ரமாண மிருந்தாலொழிய விஶ்வஸிக்கக் கூடாதனவாகையால் நிர்ணயமாகமாட்டாவென்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம்.

ஆகையினுல் அநுஸந்தாந ப்ரகாஶநங்கள் வேறுனுலும் இது பிந்நாதிகாரமென்பதற்கு ப்ரமாணம் தேடவேண்டி யிருப்பதுடன் அவிநாபூதமென்கிற ஸாரதீபிகா விருத்தமாகையினுலும், இல்லாத விபாகங்களைக் கல்பிதது ஶ்ரமப்படுவதைக் காட்டிலும் 'வ்ருக்ஷாரூடமநஸி........' என்கிற ந்யாயத்தினுல் யதாஶ்ருதார்த்தத்தை அங்கீகரிப்பது உசிதமாகையினுலும், குருபரம்பராஸார க்ரந்தத்தில், முதலில் ஶிஷ்யனுக்கு அநுஸந்தாநமும், நடுவில் ஆசார்யனுக்கு ப்ரகாஶநமும், முடிவில் ஶிஷ்யனுக்கு அநுஸந்தாநமும் சொல்லப்படுகிற தென்பது ஸஹ்ருதயஹ்ருதயங்கம மாகாததனுலும் இதுவரையிலுள்ள ஒரு ஸம்ப்ரதாயத்திலும் ஆசார்யன் அநுஸந்திக்காமல் ப்ரகாஶிப்பிக்கிறுர் என்றும் ஶிஷ்யர் ப்ரகாசிக்காது அநுஸந்திக்கிறுர் என்றும் காணுமல் இருவரும் அவரோஹணமாகவோ ஆரோஹணமாகவோ ஒரே விதமாக அநுஸந்தித்து ப்ரகாஶிப்பிக்கக் காண்கையினுலும், அநுஸந்தாந ப்ரகாஶநங்கள் ஶிஷ்யாசார்யர்களுக்கு வ்யவஸ்திதங்களென்று ராயம்பேட்டை ஸ்வாமி அருளிச்செய்வது உசிதமாகத் தோன்றவில்லை.

ஆகையினுல், சில ஸம்ப்ரதாயாபிமாநி தேவதையர்கத் தம்மை நினைத்து, 'ஶ்ரோத்ரியம் ஸர்வம் ...' என்கிற சில ஸ்வாமிகளுக்கு ஸந்தாபத்தை ஜநிப்பிக்கும் இம்மாதிரியான விஷயங்களில் விசாரிப்பது அநுசிதமாக இருந்

தாலும் ப்ராமாணிகமான அவரோஹண க்ரமாநுஸந்தாநத்தை அப்ரமாண மென்றும் அந்தபரம்பரை யென்றும் ஓர் வித்வானுன ஸ்வாமி அருளிச்செய் தபடியால் அதுவும் ஸப்ரமாணம்தான் என்பதை எழுதவேண்டியது அவஶ்ய மானதே தவிர வேறில்லையாகையினுல், இது விஷயத்தில் அடியேனுடைய அபிப்ராயத்தை ஸங்க்ரஹமாகத் தெரிவித்து விரதனுகிறேன்.

ஶுபமஹாவிஹாரமஹாஶாயின் வயச்சா ஶயவர்ணநம்

வாயஸ்ரீஶ்ரீநிவாஸார்யேண வ்யாஸ மஹாநதீக்ருதம் ॥

புத்தங்கோட்டகம்-ஸ்ரீநிவாஸாசார்யர்.

(2)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

மாசி மாஸத்திய தீபிகையின் (216-வது பக்கம் முதலுள்ள ஸ்ரீராயம்பேட்டை ஸ்வாமியினுடைய) கடிதத்தை நன்கு பராமர்சித்துப் பார்த்தேன். அதில் அடியேனுடைய ஆக்ஷேபத்துக்கு ஒரு ஸமாதாநமும் வந்ததாக மந்தமதியான அடியேனுக்கு ஏற்படவில்லை. இனி, நிருபகரான அந்த ஸ்வாமி எழுதின ஸஞ்சிகையையும், நிபுண நிருபணம் பண்ணி அடியேன் எழுதின கடிதத்தையும் நிஷ்பக்ஷபாதிகளான மத்யஸ்தர்கள் நிபுணதமமாக நிருபித்துப் பார்த்து, அவைகளில் உள்ள ஸாராஸாரங்களைத் திருவுள்ளம் பற்றவேண்டுமே யொழிய ஸ்வச்சதமமான பத்ரிகைகளை வ்ருதாவாக மஷீமலிநமாகப் பண்ணுவது ந்யாய்ய மல்லவென்று அடியேனுடைய அபிப்ராயம். எப்போதாவது ஒருக்கால் அந்த ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் ஸமாகமம் நேர்ந்து நிர்மத்ஸரர்களான பண்டிதர்களும் மத்யஸ்தர்களாக ஏற்படுவார்களாகில் அப்போது இரண்டுபேருடைய அபிப்ராயமும் இரண்டு கக்ஷிகளிலுமுள்ள ஸ்வாரஸ்யங்களும் நன்கு விஶதமாம்.

1—3—18 நிபுண நிருபகர்.

[இந்த விஷயமான சர்ச்சையை இதற்குமேல் நடத்த, தீபிகையில் அவகாஶம் இல்லை யென்பதை இது ஸம்பந்தமான வித்வான்களிடம் நாம் ஸவிநயம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறோம். ஸ்ரீ. வே தீ. மானேஜர்.]

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

சில விசேஷ குறிப்புகள்.

சென்ற மார்கழி மாஸத்தில் திருக்கண்டியூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தில், அப்பொழுது ஸம்விதாநம் செய்யப்பட்டவையாகச் சில அம்ஶங்கள் நடைபெற்றன. அவைகளுள், ந்யாய ஶிரோமணி என்னும் பிருது பெற்ற ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலை தாதாசார்யரால் செய்யப்பட்ட

ஸம்ஸ்க்ருத பாஷா ஸம்பாஷணமும், திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜ் ப்ரதாந பண்டிதரான ப்ரம்ஹ ஸ்ரீ. ராதாமங்கலம் கவிஶேகர நாராயண ஶாஸ்த்ரிகளாற் செய்யப்பட்ட கவநமும் முக்கியமானவை. இவையிரண்டையும் ஸமக்ரமாக ப்ரசுரம் செய்யவேணு மென்னும் ஆஸ்தை நமக்குத் தீவ்ரமாக இருக்கையிலும், அவகாஶம் பரிமிதமாக இருப்பதால் கவநம் செய்யப்பட்ட ஶ்லோகங்களிற் சிலவற்றை மாத்ரம் ப்ரசுரம் செய்கிறோம்.

“ [illegible] (1)

[illegible] (2)

[illegible] (3)

[illegible] (4)

* * * * * *

சென்ற தை மாஸத்தில் ஸ்ரீரங்கம் என்று ப்ரஸித்தி பெற்ற திவ்ய தேஶத்தில் பெரியதொரு ஸ்ரீ வைஷ்ணவ ஸமாஜம் சேர்ந்ததென்றும், அதில் அநேக வித்வான்கள் உபந்யாஸம் முதலியவற்றைச் செய்தார்களென்றும் பாஷாந்தர பத்ரிகைகளிலிருந்து நாம் தெரிந்துகொண்டோம். வைதிக ஸ்ரீயினுடைய அபிவ்ருத்தியை ஸதா ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கும் நமக்கு இந்த வ்ருத்தாந்தம் மிக்க ஹர்ஷத்தை ஜநிப்பிக்கின்றது. ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, இதில் அதிமாத்ரம் உத்ஸாஹ யுக்தராக இருந்தாரென்று தெரியவருகிறது. இம்மாதிரியே, ஸ்தலாந்தரங்களிலும் ஆஸ்திக ஶிரோமணிகள் ஒன்று சேர்ந்து வைதிக ஸம்பத்தை வ்ருத்தி செய்ய முயல்வாராகில், கலியின் கொடுமை கொஞ்சம் குறையலாம்.

* * * * * *

தஞ்சாவூர் ஜில்லா ராஜமன்னார் ஸந்நிதி யென்று ப்ரஸித்தி பெற்ற புண்ய ஸ்தலத்தில், இப்பொழுது ஸ்ரீ ராஜகோபாலன் வர்ஷமஹோத்ஸவத்தைக் கண்டருளுகிறான் என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். அந்த உத்ஸவ காலத்தை முன்னிட்டுக்கொண்டு, காலஞ் சென்ற கோட்டேர் ரங்கஸ்வாமி முதலியார் தர்ம ஸம்பத்துமாக, அவருடைய தம்பி குமாரரும் அந்தத் தர்ம பரிபாலகாத்யக்ஷருமான ம-ா-ா-ஸ்ரீ கோபாலஸ்வாமி முதலியார் அவர்கள் பெரியதொரு வித்வத் ஸபையை நடத்துகிறார் என்று நாம் கேள்வியுற்று மிகவும் ஆநந்திக்கிறோம். இந்தஸதஸ் மார்ச் மாஸம் 9உ உபக்ரமித்து 16உ முடிகிறதாம்; அநேக உபந்யாஸங்கள் நடைபெறுமாம்; வித்வத் பரீக்ஷையும் நடக்கின்றதாம். அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, ஸ்ரீராஜகோபாலனுடைய மஹோத்ஸவத்தையும் இந்தப் பாகவத ஸமாஜத்தையும் அநுபவிக்கும் ஆஸ்திகர்களுடைய பாக்யம் மிகப் பெரியதே.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

சந்தா வரவு.

(1918 - பிப்ரவரி மாஸம்)

1.	ஸ்ரீ. உ.ப.	வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், தஞ்சாவூர்	3 0 0
2.	,,	ஆர். கிருஷ்ணமாசாரியார், மயிலாப்பூர்	5 0 0
		ஷை (முன் வர்ஷத்திய பாக்கி)	5 0 0
3.	,,	எஸ். ஸுந்தரராஜ ஐயங்கார், மயிலாப்பூர்	5 0 0
4.	,,	சி. குமாரசக்ரவர்த்தி அய்யங்கார், பெனுகொண்டா	5 0 0
5.	,,	வி. ஸ்ரீநிவாஸாசாரியர், சிந்தாத்ரிபேட்டை	3 0 0
6.	,,	வி. கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சித்தூர்	3 0 0
7.	,,	என். ராஜகோபால அய்யங்கார், தஞ்சாவூர்	3 0 0
8.	,,	வி. எஸ். சேஷய்யங்கார், கும்பகோணம்	3 0 0
9.	,,	வி. என். நரஸிம்ம ஐயங்கார், மைசூர்	3 0 0
10.	,,	சி. ஸ்ரீநிவாசாரியர், பொன்விளைந்தகளத்தூர்	3 0 0
11.	,,	வி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், திருச்சினாப்பள்ளி	1 0 0
12.	,,	கு. கிருஷ்ணமாசாரியர், மசூலிப்பட்டணம்	3 0 0
13.	,,	ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், சேலம்	3 0 0
14.	,,	கிடாம்பி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், கொட்டையூர்	1 0 0
15.	,,	டி. அநந்தாசார்யர், விழுப்புரம்	5 0 0
16.	,,	பி. கே. கருடாசார்யர், பெங்களூர்	5 0 0
17.	,,	ஸி. துரைஸ்வாமி ஐய்யங்கார், சித்தூர்	5 0 0
18.	,,	ம-ா-ா-ஸ்ரீ. பி. டி. க்ருஷ்ண ராமாநுஜ தாஸர், திருக்காட்டுப்பள்ளி	3 0 0
19.	,,	,, காளப்ப நாயுடு, நாமக்கல்	3 0 0

50 சாமான்கள் இனாம்!! 50 சாமான்கள் இனாம்!!

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

ராஜ சுந்தரி ரோஜா.

கூந்தல் வளரும் பரிமளத்தைலம்.

50 இனாம் சமாகளுடன் டின் 1-க்கு ரூபா 1—0—0

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரிகளும், தலை மயிர் உதிர்ந்து போகாமலிருக்க வேண்டுமென்று விரும்புகிற ஸ்திரிகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக் கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மதுராதாரமுடைய பரிமளத்தைத் தெரிந்து அவைகளை வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீள்மாள் வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும் சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டுப்புண் மயிர்வெடிப்பு, மயக்கம், தலைவலி, சொறிசிரங்கு மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் இதுவொன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜாராணி கார்னேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்டு கார்டுகள் 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜாராணி உள்ள அந்தமான புரூக்ஸ் 1. ஆக 50.

சர்வதேள் விஷ சஞ்சீவி.

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற்

குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100 - இனாம் கொடுக்கப்படும்!!!

விலை பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

டசன் 1-க்கு ரூ. 5 0 0.

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

ஸ்ரீ:.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை
மதிராஸ்.

1917-18-ம் வர்ஷத்திய எக்ஸிக்யுடிவ் போர்ட்

மெம்பர்களின் பெயர்.

1.	ஸ்ரீ. உப.	கெ. ஸ்ரீநிவாச ஐயங்கார், மயிலாப்பூர்.	போஷகர்கள்
2.		ஆனரேபில் கெ. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார்	
3.	ஸ்ரீ. உப.	திவான் பஹதூர், டி. டி. ரங்காசார்யார்—ஸபாத்யக்ஷர்.	
4.	,,	ராவ் பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்.	ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.
5.	,,	டி. ராஜகோபாலாசார்யர்.	
6.	,,	ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.	கார்யதர்ஸிகள்.
7.	,,	டி. கோதண்டராம ஐயங்கார்.	
8.	,,	வி. ராஜகோபாலாசார்யர், சித்தூர்.	
9.	,,	நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.	
10.	,,	டி. அநந்தாசார்யர், விழுப்புரம்.	
11.	,,	குமார சக்ரவர்த்தி ஐயங்கார், திருச்சி.	
12.	,,	வே. ஈ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு.	
13.	,,	டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவெவ்வுளூர்.	
14.	,,	ஆர். நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.	
15.	,,	கே. ஏ. வீரராகவாசார்யர், மதிராஸ்.	
16.	,,	வி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவல்லிக்கேணி.	
17.	,,	டி. இ. சடகோபாசார்யர், கூடலூர்.	
18.	,,	வி. ரங்காசாரியர், திருவல்லிக்கேணி.	
19.	,,	என் ரங்கஸ்வாமி அய்யங்கார், கர்னூல்.	
20.	,,	எம். நரஸிம்மாசார்யர், நெல்லூர்.	
21.	,,	வி. துரைஸ்வாமி அய்யங்கார், சித்தூர்.	
22.	,,	டி. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், கோயம்புத்தூர்.	
23.	,,	என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்.	
24.	,,	எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார், மதுரை.	
25.	,,	கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், நாகப்பட்டணம்.	
26.	,,	பி. கே. கருடாசார்யர், மைசூர்.	
27.	,,	பி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எழும்பூர்.	
28.	,,	டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.	
29.	,,	எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்.	
30.	,,	எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர்.	
31.	,,	வித்தியாபூஷணம் எ. கோவிந்தாசாரியர், மைஸூர்.	
32.	,,	வி. கோபாலாசாரியார், பூந்தமல்லி.	
33.	,,	வி. பத்மநாப ஐயங்கார், மயிலாப்பூர்.	
34.	,,	ஆர். கிருஷ்ணமாசார்யர், மயிலாப்பூர்.	
35.	,,	எஸ். ஸுந்தரராஜ ஐயங்கார், மயிலாப்பூர்.	
36.	,,	என். ராஜகோபாலாசார்யார், ,,	
37.	,,	எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கோமல்.	